மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 3 சுற்றம் : 4 ஏப்ரல் 2015 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி




# பத்திரிகையாளர்கள் சங்கம் தொடங்கி வைத்தார் தமிழக ஆளுநர்


Cell : 96290 13889
98945 38529
G. ஆறுமுகம், B.Com., D.R.T.M.
G.A.Orchestra
with Voice Music
கிலாசிக்கல், ஃபோக் ( நாட்டுப்புற பாடல்) , கானா
வெஸ்டர்ன் பாடல்களுக்கு குரல்வழியில்
திரை இசைக் குழுவுடன் மெயின் ரிதம் இசைத்து அசத்தும்
G.A.வின் திரை இசைக் குழு
( குரல்வழி இசை பரிமாணம் )
13, முதல் தெரு, குருசாமி நகர்,
கொல்லியங்குணம் கிராமம்,
மயிலம் அஞ்சல், திண்டிவனம் - TK.
email : gavoicemusic@gmail.com
facebook ID : gavoicemusic@gmail.com

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly April 2015

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**ஜான் நியூபிகின்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

நெருக்கடி (தலையங்கம்)........ 3

மாங்கா இசைவெளியீடு........ 6

சங்கம்4 இலக்கியத் திருவிழாவில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பேச்சு!........ 8

பூமித்தாய் எழுதும் கண்ணீர் கடிதம்........ 9

ஊடகவியலாளர்களுக்கான புதிய சங்கம் திறப்புவிழா........ 12

பின்னணிக்குரல் கலைஞர்கள் சங்க விவகாரம்........ 14

சென்னை உயர் நீதிமன்றம் வளர்ந்த கதை........ 15

ஜி.கே.வாசன் பேட்டி........ 16

புறப்பொருள் வெண்பாமாலை........ 17

தமிழீழம் எனும் நெருப்பு காசி ஆனந்தன்........ 19

மோடி (பட்ஜெட் 2015) வழி!........21

கொட்டத்து உரையாடல் (சிறுகதை) செ.பி. இராசாராம்........ 23

சங்கம் 4 இலக்கியத் திருவிழாவில் சூழலியல் அறிஞர் ம. ரேவதி பேச்சு........ 26

சிவகாமியின் மைந்தன்........ 28

தமிழ்ச்சிற்பியின் விழா........ 30

பா.ஜ.க.வின் இந்துத்துவா பரப்புரை........ 33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.

# நெருக்கடி



நகரங்களிலே நெருக்கடி அதிகரித்துள்ளது. வாழ்க்கையும் சரி, மனிதர்களின் மனநிலையும் சரி நெருக்கடியில்தான் இருக்கிறது. முக்கியமாக சென்னை மாநகரத்தில் நெருக்கடிகளுக்குப் பஞ்சமில்லை, அது பல வடிவங்களில் இடைவெளியில்லாமல் இருந்து கொண்டேதான் இருக்கிறது.

நெருக்கடிகளுக்குப் பயந்தவர்களும், அதை விரும்பாதவர்களும் தங்களது சூழ்நிலை காரணமாக, ஒரு கட்டயாத்தின்பேரில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இது இப்படியிருக்க, சென்னை மாநகரத்தில் நெய்தல் நிலத்தின் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கும் மீனவர்கள் வேறு மாதிரியான நெருக்கடிக்கு ஆளாகின்றனர். கடற்கரை சுத்தமாக இருக்க வேண்டும், குடிசைகள் இருக்கக்கூடாது, ஆகவே மீனவர்கள் தங்கள் வாழிடங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நெருக்கடிக்கு ஆளாகின்றனர்.

இவர்களைப் போலவே ஏழைகளாக இருப்பவர்கள் தங்கள் வசதிக்கேற்ற வண்ணமாக சிறுசிறு குடிசைகள் அமைத்து நகரத்தில் வாழ்ந்தாலும் அவர்களது குடிசைகளுக்கு அடிக்கடி தீவைத்து, போதும் இந்த நரக வாழ்க்கை என்று அவர்களை எண்ண வைத்து, வேறு இடத்தில் இடம் தருகிறோம் அங்கே போய் குடியிருங்கள் என்று விரட்டுகிறது நாகரிக சமுதாயம்.

இது ஒருபுறமிருக்க சிற்றூர்களிலோ நிலைமை வேறுவடிவத்தில் நெருக்கடியைத் தந்து கொண்டிருக்கிறது. அங்கே ஒருசிலர் படித்துவிட்டு நல்ல வேலைகளில் அமர்ந்து தங்களது வாழ்க்கைத்



தரத்தை உயர்த்திக்? கொள்கிறார்கள். அவர்கள் தங்களது குடும்பத்தினரை நகரங்களுக்கே அழைத்துச் சென்று விடுகின்றனர். இப்படிப்பட்ட சிலரைப் பார்க்கின்ற ஊர்களில் உள்ள மக்கள், நகரங்களுக்கு இடம்பெயர்ந்தவர்களின் படாடோ பங்களைப் பார்த்துவிட்டு அவர்களைப் பின்பற்ற வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகின்றனர். சிற்றூர் களில் ஒருசிலர் இருந்தாலும் கூட அவர்கள் தங்களது உழவுத்தொழிலை விட்டுவிடும் நெருக்கடிக்கு ஆளாகின்றனர். அவர்கள் உழவுத் தொழில் செய்வதற்கான ஆள் பலம் இல்லாமல் விளைநிலங்கள் தரிசாகின்றன. அந்தத் தரிசுகளை குறைந்த விலைக்கு விற்கும் நெருக்கடிக்கும் ஆட்பட்டு விடுகின்றனர்.

காலம் காலமாக தங்களின் தாயாக இருந்த விளைநிலங்களை அடிமாட்டு விலைக்கு வேறு மாநில கொள்ளையர்களுக்கு விற்கும் அவல நிலை தற்போது தமிழகத்தில் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது என்பது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் உள்ள நெருக்கடி என்பதை நாம் உணர வேண்டும்.

தமிழர்களின் நிலங்களில் முதன்மையாகச் சொல்லப்படும் குறிஞ்சி நிலத்தின் பூர்வகுடி மக்கள் மிகவும் சிக்கலான நெருக்கடிக்குள் இருக்கின்றனர். காடுகள் அழிக்கப்படுகின்றன. பணக்காரர்களாக ஆக வேண்டும். தானும் தனது குடும்பமும் மட்டுமே வாழ வேண்டும் என்று முடிவு கட்டி, பலபேருடைய உழைப்புகளை தங்களதாக்கிக் கொள்ளும் பலர் மரங்களை வெட்டி விற்றுக் கொள்ளையடிப்பதும், அரசியல் அதிகாரத்தை வைத்துக் கொண்டு காடுகளை அழித்து தோட்ட வீடுகளையும், வாகனங்கள் செல்ல சாலைகளையும் அமைத்து காடுகளில் வசிக்கும் விலங்கு பறவையினங்களுக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகின்றனர். பறவைகள் பாவம், இடம் பெயர்கின்றன, அல்லது செத்து மடிகின்றன. ஆனால் விலங்குகள் குறிஞ்சி நிலமக்களின் வாழிடங்களைத் தாக்குகின்றன. இயற்கையைப் பாதுகாத்து இயற்கையோடு வாழ்ந்து வரும் மனித சமூகத்தைக் கொல்கின்றன.

சில விலங்குகள் மனித உடலை சுவைத்து உண்ணவும் தொடங்கி விடுகின்றன. இதில் இன்னொரு அவலமான நிலை என்னவென்றால் அரசாங்கம் விலங்குகளைப் பாதுகாக்கிறோம் என்று திட்டம் தீட்டி, காடுகளில் உள்ள சில பகுதிகளை வனவிலங்குகள் பாதுகாப்புப்பகுதி, அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று கட்டாயப்படுத்தி பூர்வ குடிகளை நெருக்கடிக்குள்ளாக்குகிறது.

இவர்களுக்கு கொடுக்கப்படுகிற நெருக்கடிதான் மிகவும் மோசமான நெருக்கடி. இவர்கள் போராடுகிறார்கள். போராடிக்கொண்டே இருக்கிறார்கள். போராடித் தோற்றும் போகிறார்கள். அவர்களது தோல்வி ஒட்டுமொத்த தமிழர்களின் தோல்வி என்பதை புரிந்து கொள்ள, தன்னலம் கொண்ட கொள்ளையர்களும், அதிகாரத்தில் இருக்கும் கொள்ளையர்களும் ஏனோ மறந்து போகிறார்கள். நெருக்கடி தருபவர்களின் சந்ததிகள் நெருக்கடிக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ளுவார்கள் என்று எந்த முட்டாளும் நினைக்கக்கூட மாட்டான். ◆


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

**பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-**
**பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-**
**கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-**
**கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-**
**க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-**

**சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-**
**ஆண்டு சந்தா ரூ. 120/-**




# இசை வெளியீட்டு விழா

மாங்கா திரைப்பட இசை வெளியீட்டு விழா ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று காமராசர் அரங்கத்தில் நடந்தது. ஏதோ ஒரு பெரிய கட்சியின் மாநாடு போல் கூட்டம் இருந்தது. வாகனங்கள் நிரம்பி, வருகின்ற வாகனங்களுக்கு இடமில்லாமல் திக்கித் திணறியது காமராசர் அரங்கம். உள்ளே சாதாரணமாக ஒரு இசை வெளியீட்டு விழாவிற்கு எத்தனை பேர் வருவார்களோ அத்தனை பேர்கள் மேடையில் இருந்தார்கள். காமராசர் அரங்கத்தில் உள்ள அத்தனை இருக்கைகளும் நிரம்பியிருந்தன. இப்படிப்பட்ட பிரம்மாண்டமான ஒரு இசைவெளியீட்டு விழாவின் நாயகன் யார்? அவர் மாங்கா திரைப்படத்தின் தயாரிப்பாளர் திரு. சக்திவேல் அவர்கள்தான். தொழிலதிபரான திரு சக்திவேல் அவர்கள், தனது தொழில் வாழ்க்கையில் திரைப்படத்துறையையும் இணைத்திருக்கிறார். விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் மிகச் சுருக்கமாக, அதே நேரத்தில் உள்ளன்போடு வரவேற்றுப் பேசினார் தயாரிப்பாளர் சக்திவேல் அவர்கள். விழாவின் துவக்கத்தில் வாழ்த்திப் பேசிய, மாங்கா படத்தில் தந்தை பாத்திரத்தில் நடித்த நடிகர் இளவரசு அவர்கள், மாங்கா படம் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றார். “திரு. பாரதிராஜா அவர்களிடம் நான் உதவியாளராக இருந்தபோது, கடலோரக்கவிதைகள் படத்தில் நடிக்க நாயகி தேர்வு நடந்து கொண்டிருந்தது, ரேகா அவர்களை அழைத்து வரும்படி இயக்குநர் என்னை அனுப்பினார். நான் அவரை அழைத்துக் கொண்டு வரும்போது, இவர், இந்தக் கதைக்கு ஒத்துவருவாரா என்று, அவரை, கார் கண்ணாடி வழியாகப் பார்த்தேன். நான் அவரைப் பார்ப்பதை பார்த்த ரேகா அவர்கள் ஓரமாகப் போய் உட்கார்ந்து கொண்டார். அவர்தான் இந்தப் படத்தில் எனக்கு மனைவியாக நடித்திருக்கிறார். தயாரிப்பாளர் பெரிய இந்த அரங்கத்தை சின்ன அரங்கமாக மாற்றிவிட்டார். இந்தப்படத்தின் நாயகன் பிரேம்ஜி அவர்களுடனும் அவரது குடும்பத்துடனும் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ்த் திரைப்பட வரலாறை நாம் எழுதினால் அதில் இளையராஜா, கங்கை அமரன் ஆகியோரை விட்டுவிட்டு எழுத முடியாது. அந்தக் குடும்பத்திலிருந்து வந்தவர்தான் பிரேம்ஜி. சிறப்பாக நடித்திருக்கிறார். இப்படம் நிச்சயம் வெற்று பெறும்“ என்று வாழ்த்தினார்.

கே.ஆர் அவர்கள் வாழ்த்திப் பேசியபோது தயாரிப்பாளர், இயக்குநரைப் பாராட்டினார். தற்போது திரைப்படங்கள் பலவிதமான நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றன. யார் வேண்டுமானாலும் எந்தப்படத்தின் மீதும் எதையாவது சொல்லி வழக்குத் தொடுக்கலாம் என்ற நிலை இருக்கிறது. அதனால் பாதிக்கப்படுவது திரைப்படத் தயாரிப்பாளர்கள்தான். ஆகவே உயர்நீதிமன்ற

தலைமை நீதிபதி அவர்கள், இவ்வாறு வழக்குப் போடுபவர்களிடம் படத்தின் தயாரிப்பு மதிப்புக்கு ஏற்றபடி ஒரு டெபாசிட் தொகையை நீதிமன்றத்தில் கட்ட வேண்டும் என்று சொல்ல வேண்டும் என்றார்.

இயக்குநர் வி. சேகர் அவர்கள் படக்குழுவினரை வாழ்த்திப் பேசினார். பாவலர் வரதராசன் அவர்கள் இல்லை என்றால் இளையராஜா இல்லை என்று ஜெயகாந்தன் ஒருமுறை கூறினார். அந்த அளவிற்கு பாவலர் அவர்கள் குடும்பத்திற்காக உழைத்திருக்கிறார். அண்ணன் கங்கை அமரன் அவர்களுடன் பணியாற்றியிருக்கிறேன். சிறந்த படைப்பாளி. அவரது மகன் பிரேம்ஜி நடிக்கும் இந்தப்படம் வெற்றி பெற வாழ்த்துகள் என்றார்.

பாடலாசிரியர் சினேகன் அவர்கள், மாங்கா படம் வெற்றி பெற வாழ்த்துகிறேன். கலைஞர்கள் மகிழ்ச்சியாக இல்லை. உங்கள் முன்னால் சிரிக்கிறோம் அவ்வளவுதான். எங்களது சிறிய புன்னகைக்கு வெளியே ஆயிரம் கண்ணீர்த்துளிகள் இருக்கின்றன என்றார். தொடர்ந்து பேசிய இயக்குநர் சக்தி சிதம்பரம் அவர்கள், இயக்குநர் என்னிடம் பணியாற்றியவர். என்னிடம் பணியாற்றி இவ்வளவு புத்திசாலியாக இருப்பதுதான் ஆச்சரியம். அவருக்கும் படக்குழுவினருக்கும் வாழ்த்துகள் என்றார்.

வசந்த அன் கோ உரிமையாளர் திரு. வசந்த அவர்கள், மாங்கா என்ற ஒரு சொல்லில் பல கருத்துக்களைச் சொல்லி விரைவாக தனது வாழ்த்துரையை முடித்தபோது அரங்கம் அதிர கையொலி எழுப்பப்பட்டது. அவரைத் தொடர்ந்து திருச்சி வேலுச்சாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சகோதரர் சக்திவேல் அவர்களின் துணிச்சல் பாராட்டத் தக்கது. இளையாராஜா அவர்களது குடும்பத்தினரைப் பற்றிப் பேசினார்கள். அது உண்மைதான். 1967 ஆம் ஆண்டு குழந்தைக்கட்டுப்பாடு திட்டம் கொண்டு வரப்பட்ட போது, அதற்கு எதிராக பாடல்கள் பாடினார், அதுவும் அந்த நாட்களில் புகழ்பெற்ற இந்திப்பாடலான ரூப்பத்தரா மஸ்தானா என்ற அந்த மெட்டில் அந்தப் பாடலைப் புனைந்து பாடினார் என்று கூறி அந்தப் பாடலைப் பாடிக்காட்டினார். அதை, தான் நேரில் கேட்டதாகவும் கூறினார். நடிகை ரேகா பேசுகையில், தயாரிப்பாளருக்கு குழந்தை மனது, பணம் நிறைய வைத்திருக்கிறார். நிறைய படங்கள் எடுக்க வேண்டும். அந்தப்படங்களை மக்கள் அதிகமாகப் பார்த்து அவருக்கு அதிகப்பணத்தைக் கொடுக்க வேண்டும். நான் ஒரு இயக்குநரின் முதல் படத்தில் நடித்தால், அந்த இயக்குநர் வெற்றி பெறுவார். ராஜா அவர்களும் நிச்சயம் வெற்றி பெறுவார் என்று வாழ்த்தி விடைபெற்றார்.

பவர் ஸ்டார் சீனிவாசன், திரு சக்திவேல் அவர்கள், எனக்கு நடிக்காமலே பணம் தந்தவர். இந்தப் படத்தில் நான் நடிக்க வேண்டியது தவறி விட்டது. அவரது அடுத்த படமான "தேங்கா" வில் வாய்ப்புத் தருவதாகக் கூறியிருக்கிறார். படம் வெற்றி பெற வாழ்த்துகள் என்றார். பிரேம்ஜி அவர்கள் பேசும்போது இன்று ஏப்ரல் ஒன்று முட்டாள்கள் தினம். இந்தக் கதையிலும் ஒரு பாத்திரம் அப்படித்தான். தல பிறந்தநாளான மே ஒன்றாம் தேதி இந்தப் படம் வெளிவந்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்.

கதாநாயகனின் தந்தையான திரு. கங்கை அமரன் அவர்கள் தயாரிப்பாளர், இயக்குநரை வாழ்த்தினார். மாங்கா என்பது யூத், பழம் என்றால் முதுமை, பிஞ்சு என்றால் குழந்தை. ஆகா மாங்கா யூத்துகளுக்கு மிகவும் பிடிக்கும். தயாரிப்பாளரின் ஊர் பெருந்துறை. எனக்கும் பெருந்துறைக்கும் ஒரு தொடர்பு உண்டு. நானும் என் அண்ணன்களும் அங்கே நிகழ்ச்சி நடத்தினோம். அப்போது எனக்கு கையில் கட்டி வந்துவிட்டது. அண்ணன் பாவலர் அவர்கள் மருத்துவரிடம் செல் என்று கூறி அனுப்பி வைத்தார். அந்த மருத்துவர் கட்டி இருந்த இடத்தை கத்தி கொண்டு அறுத்து, மருந்து வைத்துக் கட்டினார். அந்தத் தழும்பு இன்னும் என் கையில் இருக்கிறது. திருச்சி வேலுச்சாமி அவர்கள் சொன்னதுபோல் அண்ணன் பாவலர் இல்லையென்றால் நாங்கள் இல்லை என்றார். தொடர்ந்து விழாவில் யுவன் சங்கர் ராஜா, வெங்கட்பிரபு, டி.பி.கஜேந்திரன், திரு. செல்வா, திரு. ரவிமரியா உட்பட பலர் வாழ்த்திப் பேசினார்கள். விழா நடந்து கொண்டிருந்த போது இடையிடையே வாகனங்களின் எண்களைச் சொல்லி போக்கு வரத்துக்கு உதவும்படி கேட்டுக் கொண்டனர்.

அந்த அளவிற்கு கூட்டம் இருந்தது. வாகனங்களும் இருந்தன. இறுதியில் வந்திருந்த அனைவருக்கும் உணவு தரப்பட்டது. சாப்பிட்டவர்கள் அனைவரும் நல்ல உணவு என்று பாராட்டிச் சென்றனர். இது பாடல் வெளியீட்டு விழாவா அல்லது ஒரு ஊரின் திருவிழாவா என்று வியக்கும் வண்ணம் எல்லோரும் நிறைவாகச் செல்லும் வகையில் விழாவை அமைத்திருந்தார் தயாரிப்பாளர் திரு. சக்திவேல் அவர்கள்.

◆

# சங்கம் 4 இலக்கியத் திருவிழாவில்...



**"வேலுப்பிள்ளை பிரபாகரன் 60 :** தமிழர் பொது வரலாற்றில் இவருக்கான எதிர்கால இடம் என்ன?" சிறிதரன், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்.

இயற்கை என் நண்பன், வாழ்க்கை என் வழிகாட்டி என்று சொல்லுவார் தலைவர் பிரபாகரன். தமிழீழம் என்ற பதம் 1925ஆம் ஆண்டு பெருஞ்சித்திரனார் அவர்களால் ஆளப்பட்டது. பிரபாகரன் அழிக்கப்பட முடியாதவர். சேர சோழ பாண்டியர்கள் போல, ஆனால் கண்கண்ட தமிழர் படையைத் தந்தவர் அவர். கஸ்பார் அடிகளார் சொன்னது போல காலத்தின் கட்டாயத்தால் தீர்வு கிடைத்தே தீரும்.

தமிழகக் கவிஞர் ஒருவர் சுவிட்சர்லாந்து சென்ற போது அந்நாட்டில் கேட்டார்களாம் நீங்கள் யார்? என்று, அதற்கு அவர் இந்தியத் தமிழர் என்றாராம். இதைக் கேட்ட அந்த மனிதர் டைகர்? என்று திருப்பிக் கேட்டாராம். பிரபாகரனை உலகம் பேசுகிறது. பிரபாகரன் அவர்களிடம் மிகக்கூடிய மனிதத்தவம் இருந்தது. கீழ்ப்பட்ட வார்த்தைகளை அவர் பேசுவதில்லை.


ஒரு முறை ராசபக்சேவின் மகன் விடுதலைப் புலிகளிடம் மாட்டிக் கொண்டாராம். விபரத்தை தலைவரிடம் கூறியிருக்கிறார்கள் புலிவீரர்கள். தலைவர் பிரபாகரன் அவர்களோ வேண்டாம், விட்டுவிடுங்கள் என்றார். தலைவரின் துணைவியார் மற்றும் புலிவீரர்கள் இராணுவத்தால் சுற்று வளைக்கப்பட்ட ஒரு தருணத்தில் என்ன செய்வது என்று தலைவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது துணைவியாரைக் கொளுத்தி விடுங்கள் சிங்களர்களிடம் அகப்படாதீர்கள் என்றார்.

தன்னை இழந்து தன் இனத்தைக் காக்கும் உத்தமர். ஈழத்தில், பாரதி கண்ட புதுமைப்பெண்கள் அல்ல, பிரபாகரன் கண்ட புதுமைப் பெண்களே இருக்கிறார்கள். சாதியம் பேசமுடியாத மண் தமிழீழம். அப்படி கட்டமைத்தவர் தலைவர் பிரபாகரன்.

தந்தை செல்வா அவர்கள் மலேசியாவில் பிறந்து ஈழத்துக்காக உழைத்தவர். 1950 களில் இனத்தின் அவதார புருசன். அவருக்குப் பிறகு இளைஞர் பிரபாகரன் போராட்டத்தைக் கையிலெடுத்தார். உலகமாகச் சேர்ந்து ஈழத்தை அழித்தார்கள். ஆசீய சீலன் எனக்குத் தலைவன். அகிம்சையை ஏந்திய திலீபன் சாவு, துப்பாக்கியை எடுத்தால்தான் வெல்ல முடியும் என்ற நிலைக்கு மாறியது. 1990ஆம் ஆண்டு இந்தியா டுடே என்ற ஏடு மதிப்பீடு செய்தது. உலகத்திலேயே மிகச்சிறந்த கொரில்லாத் தலைவர் பிரபாகரன் என்று. மிகச்சிறந்த கால்பந்தாட்ட வீரர் கல்கத்தாவில் ஒரு நேர்காணலில், பிரபாகரனைக் கட்டி அணைத்து முத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் தமிழீழம் பலிகடா ஆனது. அன்னை இந்திரா இருந்தவரை ஈழம் காக்கப்பட்டது. இனஅழிப்பு அதாவது 1,46,400 மக்கள் அழிக்கப்பட்டனர். இந்த மிகப்பெரிய இனஅழிப்பை, இனஅழிப்பு என்று உலகம் ஏற்க மறுக்கிறது. தமிழ்நாடு சட்டசபையில் இனஅழிப்புதான் என்று தீர்மானம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால் உலக அவை தயங்குகிறது.

1956ஆம் ஆண்டு இலங்கை அரசு ஸ்ரீ சட்டம் கொண்டுவந்தது. அதை எதிர்த்துப் போராடிய விவசாயிகளில் 156 பேரை இலங்கை அரசு கொன்றது முதலே இனஅழிப்பு தொடங்கிவிட்டது. எமது தலைவர் ஒரு நேர்காணலில் ஆயுதங்கள் மீது எங்களுக்கு காதல் இல்லை என்று கூறியிருக்கிறார். காற்றை எதிர்த்துப் போராடித்தான் பட்டம் பறக்க முடியும். நாங்கள் போராடுவோம். இனி ஆயுதம் இல்லை. அறப்போராட்டம்தான். ஒருவர் போனால் இன்னொருவர் வருவார். இது அவர்களுக்கே தெரியாது.



# பூமித்தாய் எழுதும் கண்ணீர் கடிதம்

என் அன்புப் பிள்ளைகளே!

உங்களைப் பாலூட்டி, சீராட்டி வளர்த்த உங்கள் அன்பு அன்னை பூமித்தாய் எழுதுவது,

நான் கூறுவதைச் சற்று கவனமாகக் கேளுங்கள், என்னைப் படைத்தபொழுது

என் தந்தை மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மரம், செடி, கொடி, ஊர்வன, பறப்பன, நடப்பன, நீரினுள் வாழ்வன என அனைத்தையும் உருவாக்கி பேரானந்தம் கொண்டார். இறுதியில் உங்களையும் படைத்தார். அவர் படைத்த எல்லா உயிரினங்களிலும் உங்களைத்தான் மிக உயர்ந்த படைப்பாகக் கருதினார்: உங்களைத்தான் நேசிக்கவும் செய்தார். இறுதியில் தான் படைத்த அனைத்தையும் நல்லதாகவே கண்டார். உங்களை அனைவரையும் நான்தான் என்னுடைய மடியில் தாங்கி பாதுகாத்து வந்தேன். நீங்கள் பிறக்கும்போதும், இறக்கும்போதும் உங்களைத் தாங்கி சுமப்பவள் நான்தான். ஆனால் நான் உங்களுக்குச் செய்த, செய்துவருகின்ற நன்மைகளை எல்லாம் மறந்து நீங்கள் எனக்குச் செய்யும் தீமைகளால் நாம் மிகவும் மனம்நொந்து போகின்றேன். இப்போது சாகும்தருவாயில் இருக்கும் நான் ஒருசில உண்மைகளை உங்களிடம் சொல்லும் கட்டாயத்தில் இருக்கின்றேன்.

2004, டிசம்பர் 26 என்று சொன்னதுமே உங்கள் இதயம் படபடக்கின்றது. சுனாமி...சுனாமி...என்று எல்லாம் காதிலும் ஒலித்த நாள். கண் இமைக்கும் நேரத்தில் 1,75,000க்கும் மேல் மனித உயிர்களைச் சுனாமி அலை கவ்விக்கொண்டது. கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை முற்றிலுமாக சிதைத்தது. நாற்றிசைகளிலும் ஒலித்த அழுகுரல் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றது. நீங்கள் அனைவரும் என்னையும், என்னைப் படைத்த என் தந்தையையும் இகழ்ந்து பேசினீர்கள்: சாபமிட்டீர்கள். ஆனால் உங்கள் சுயநலப்போக்கால் தான் இவை நிகழ்ந்தன என்று ஏன் உங்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை? தாதுப்பொருள்களை எடுப்பதற்காக கடற்கரையோர மணல் குன்றுகள் அழிக்கப்படுகின்றன. இங்குள்ள எல்லா தவறுகளையும் நீங்களே செய்துவிட்டு கடைசியில் பழியை என் மேலும் என் தந்தையின்மீதும் போடுவது என்ன நியாயம்?

உங்கள் அனைவருக்கும் வாழ்வாதாரமாக இருப்பது தண்ணீர். ஒருவர் உணவில்லாமல் ஒரு மாதம்கூட வாழலாம். ஆனால் தண்ணீர் இல்லாமல் ஒரு வாரம் கூட வாழமுடியாது. எனவேதான் தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே என்கிறது நமது தமிழ் பழமொழி. இப்புவியில் 97% கடல் நீராகவும், 2% பனிக்கட்டியாகவும் இருக்கிறது. ஆனால் நீங்கள் குடிக்கும் நல்ல நீரோ 1% தான். இந்த ஒரு சதவீத தண்ணீரையும் நீங்கள் மாசுபடுத்துகின்றீர்கள் என நினைக்கும்போது உண்மையில் வேதனையாக இருக்கின்றது. தமிழகத்தில் மட்டும் சுமார் 1963 தொழிற்சாலைகள் உள்ளன. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, தோல் பதனிடும் ஆலை, சர்க்கரை ஆலை, பால் பண்ணைகள், பசைப்பொருள், துணிச்சாயம், தரைத் தகடுகள், அனல் மற்றும் அணு மின்நிலையங்கள், மருந்து தயாரிப்பு சாலை, உரம், இரசாயனம், உலோகத் தொழிற்சாலை, சிமென்ட், காகித ஆலைகள், வார்ப்பு ஆலைகள் என தெருவுக்குத் தெரு தொழிற்சாலைகள் இருக்கின்றன.

பருவமழையை நம்பித்தான் நாங்கள் பயிர் செய்கின்றோம். இன்று பருவமழைப் பொய்த்து விட்டதே என்று நீங்கள் புலம்புகிறீர்கள். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று என்றாவது எண்ணிப்பார்த்ததுண்டா? இயற்கைக்காற்றைச் சுவாசிக்கும் நீங்கள் பிராணவாயுவை எடுத்துக் கொண்டு கரியமில வாயுவை வெளியிடுகின்றீர்கள் ஆனால் தாவரங்கள் கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு உங்களுக்குத் தேவையான பிராண வாயுவை வெளியிடுகின்றன. இவ்வாறு, எனது உடன்பிறப்புகள் உங்களுக்கு நல்லது செய்ய, நீங்களோ எனது உடன்பிறப்புகளான மரங்களை வெட்டுகின்றீர்கள். இனி இந்நிலை நீடித்தால் உங்களால் எப்படி உயிர் வாழ முடியும்? எப்படி நல்ல காற்று உங்களுக்குக் கிடைக்கும்? மரங்கள் இருந்தால்தானே மழைபெய்யும்.

நீங்கள் குழந்தையாக இருக்கும்போது, தண்ணீரை விலைகொடுத்து வாங்கும் காலம் விரைவில் வந்துவிடும் என நான் எச்சரித்தேன். ஆனால் நீங்கள் என்னைப் பார்த்து எள்ளி நகையாடினீர்கள். ஒரு காலத்தில் இலவசமாக கிடைத்த தண்ணீர் இப்போது விலைக்குக் கிடைக்கிறது.

இன்று ஒரு லிட்டர் தண்ணீர் ரூ.20க்கு விற்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்டு பாட்டிலில் அடைக்கப்படும் 1000 லிட்டர் தண்ணீர் ரூ.20,000 க்கு விற்கப்படுகிறது. நாளை விலைக்குக்கூட உங்களால் தண்ணீரை வாங்கமுடியாது. தண்ணீர் குடிக்காமல் கூட நீங்கள் ஒரு வாரம் உயிர் வாழலாம். ஆனால் காற்று இல்லாமல் ஐந்து நிமிடங்கள்கூட உங்களால் உயிர்வாழ முடியாது. ஒரு மனிதன் சராசரியாக ஒரு நாளைக்கு 26,000 முறை மூச்சினை உள்ளிழுக்கிறான். ஒருவருக்கு நாள் ஒன்றுக்குத் தேவைப்படும் ஆக்ஸிஜன் அளவு 14 கிலோகிராம். நீங்கள் உட்கொள்ளும் பொருட்களில் 80% காற்று உள்ளது. இது நீங்கள் உட்கொள்ளும் உணவின் அளவைவிட 12 மடங்கு அதிகம். ஆனால் சுவாசிக்கும் காற்று சுத்தமானதாக இருக்கின்றதா? 100 ஆண்டுகளுக்கு முன்பு கரியமில வாயுவின் அளவு 275 மில்லியன் பகுதிகளாக இருந்தது. 2040ம் ஆண்டுகளுக்குள் இரு 450 மில்லியன் பகுதிகளாக உயரும் என அஞ்சப்படுகிறது. இதைத்தவிர கார்பன் மோனாக்சைடு, கார்பன் டை ஆக்ஸைடு, குளோரின் டை ஆக்ஸைடு, ஹைட்ரோ கார்பன்கள் காற்றில் கலந்து இவற்றின் தூய்மையைக் கெடுக்கிறது. இந்தியாவின் காற்று மாசுபட 60% காரணமாக இருப்பது இயந்திர வாகனங்கள், 390% தொழிற்சாலைகள், 2% வீடுகளிலிருந்து வெளிவருபவைகள். நீங்கள் சுவாசிக்கும் காற்றைக்கூட விலைக்கொடுத்து வாங்கும் காலம் வெகுவிரைவில் இல்லை.

இறுதியாக நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது. சோலைநிலமாக இருந்த என்னை பாலைவனமாக மாற்றிவிட்டீர்கள். விளைநிலமாக இருந்த என்னை விலைநிலமாக விற்றுவிட்டீர்கள். தாமிரபரணி, வைகை, பாலாறு, வைப்பாறு உட்பட ஆற்றுப்பகுதிகளில் மணல்கொள்ளையைத் தடுக்கச் செல்லும் அதிகாரிகள் படுகொலை செய்யப்படுகிறார்கள். குளங்களையும் கால்வாய்க்களையும் நிரப்பிப் பல அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டிவிட்டீர்கள். வயல்களை நிரப்பி சாலைகளையும், தொழிற்சாலைகளையும் அமைத்துவிட்டீர்கள். அதிக மழைப்பொழிவு ஏற்படும்போது மழைநீர் வெளியேற வழியில்லாமல் அனைத்தையும் அடைத்துவிட்டீர்கள். இருக்கின்ற கொஞ்ச நிலத்தில் உற்பத்தியைப் பெருக்க எண்ணி வீரிய மிக்க விதைகளையும் இட்டு என்னை நச்சுக்காடாக மாற்றி விட்டீர்கள். பூச்சுக்கொல்லி மருந்தைப் பயன்படுத்துவதால் நீங்கள் உண்ணும் உணவில் நீங்களே நஞ்சைக் கலந்துவிட்டீர்கள் என்று எண்ணும்பொழுது என் உள்ளம் பதறுகின்றது.

இன்று பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துவதால் என்னை முற்றிலுமாக சிதைக்கின்றீர்கள். நீங்கள்

பயன்படுத்தும் பிளாஸ்டிக் மண்ணுக்குள் செல்வதால் இது மழைநீரை மண்ணுக்குள் செல்ல அனுமதிப்பதில்லை. மண்ணுக்குள் காற்று புகுவதைத் தடுத்து விடுகிறது. விதைகளை முளைக்க விடாமல் மூடிவிடுகிறது. நீங்கள் வீசி எறிகின்ற பிளாஸ்டிக்கைப் பல நிலவாழ், கடல்வாழ் உயிரினங்கள் உட்கொண்டு மடிந்துவிடுகின்றன. இப்படியாக உங்கள் வாழ்நாளில் எத்தனை உயிரினங்களைக் கொன்று குவித்திருப்பீர்கள்.

எதார்த்தமான உண்மைகளை உங்களிடம் சொல்லிவிட்டேன். எது நல்லது எது தீயது என்பதைப் பகுத்தறியும் அறிவை என் தந்தை உங்களுக்குத் தந்துள்ளார். இனி என்ன செய்ய வேண்டும் என்பது உங்கள் கையில்தான் உள்ளது.

இப்படிக்கு,

***கண்ணீருடன் பூமித்தாய்***




P. **பார்த்திபன்** M.com.,
**முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர், கடலூர்**
**பேச: 93677 53126**




# ஊடகவியலாளர்களுக்கான புதிய சங்கம் திறப்பு விழா

ஆல் இந்தியா நியூஸ்பேப்பர் எடிட்டர்ஸ் பப்ளிசர்ஸ் அசோசியேசன் என்ற செய்தி ஊடகவியலாளர்களுக்கான சங்கம் தமிழக ஆளுனர் மேதகு ரோசய்யா அவர்களால் 6/4/2015 காலை 11:30 மணியளவில் சென்னை, தியாகராயநகர், ஆந்திரா கிளப்பில் நடந்த நிகழ்வில் துவங்கி வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் டாக்டர் எஸ். இராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விழாவில் ஓய்வுபெற்ற நீதியரசர் எஸ். சம்பந்தம் அவர்கள், ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி திரு. செண்பகராமன் அவர்கள், பெயரியல் நிபுணர் திரு. இராஜராஜன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர். ஏராளமான ஊடக நண்பர்கள் வந்திருந்தனர். இச்சங்கத்தில் முற்றம் இதழின் சிவகங்கை செய்தியாளர் திரு. வேல்பொன்முடி அவர்கள் சிவகங்கை மாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மேதகு கவர்னர் அவர்கள் ஆற்றிய உரை:

ADDRESS BY HIS EXCELLENCY DR.K.ROSAIAH, GOVERNOR OF TAMIL NADU AT THE INAUGURATION OF ALL INDIA NEWSPAPER EDITORS AND PUBLISHERS ASSOCIATION AT ANDHRACLUB, T.NAGAR, CHENNAI ON 06.04.2015 AT 11.30 AM.

---

It is a pleasure to inaugurate the All India News Paper Editor and Publishers Association and address this distinguished gathering here today.

India is known for its rich and vibrant democracy. Press and media - the fourth estate is one of the pillars of democracy.

Even though invention of newspaper traces back to as early as 16th century, the first newspaper was published in the early 17th century. History reveals that the first newspaper was started in 1766 by William Bolts in Calcutta.

Press played a predominant role and was the backbone of our Nation's Freedom movement. Great leaders used press to propagate their message to the masses and united them for the cause of our nation's freedom. Mahatma Gandhiji, Dadabhai Naroji, Balagangadar Tilak, Madan Mohan Malaviya ignited patriotic fervor in the masses through their writings. In the Madras Presidency 'SwadesaMitran' run by G.Subramania Iyer propogated the need for a mass movement to liberate our nation from the foreign yoke. Its sub-editor, bharathiyar evoked patriotic fervor through his fierce and aggressive writings. Newspapers and Magazines had faced hardship and lot of hurdles in coming out with their publications. They even faced areests, ban and huge loss caused by the British. The Editors commanded a very high reputation and influenced people during the nation's freedom movement.

2011 Report published by the World Association of Newspapers and Publishers reveals that india leads the world in terms of newspaper circulation with nearly 330 million newspapers circulated daily.

In this era of technology we have advanced in all spheres. Media industry has undergone rapid changes. Statistics reveal that aroung 2.5 Billion people across the world read newspapers in print and 800 million on digital platform. In this competitive world newspapers should cope with the changing trends, adopt latest technologies and strategies. Above all, its reports should be fair and unbiased. This will help to win them trust among its readers. Embracing Technology and marketing Journalism alone will not suffice. Needs of the Members of the organization and expectation of its readers shou;d be met. Contribution in the form of articles, pictures, cartoons, photos are doing a great job. The stress, difficulties and threats they meet are many.

Safe guarding and promotion of human values, contributing to nation building are imperative. Equally earning trustm goodwill and faith of the people and ensuring their employees safety rests with the editors and publishers. They should maintain the dignity of their organization.

It is nice and a welcome one to establish an All India Newspaper Editors and Publishers Association. I am sure this will play a vital role in upliftment of the employees in various levels of press and media throughout various legitimate means. I appeal to the All India Newspaper Editors and Publishers Association to work at the National Level and dedicate itself for the cause and welfare of the Editors, Publishers and the Members of the Newspapers.

The All India Newspaper Editors and Publishers Association shou;d also take it as its onerous responsibility in ensuring free and fair reporting.

I convey my warm felicitations to Dr.S.Rajendram, President, Office Bearers and Members of All India Newspaper Editor & Publishers and wish it all success in its endeavours.

MY GREETINGS TO YOU ALL.

**JAI HIND.**

◆

# பின்னணிக் குரல் கலைஞர்கள் சங்க விவகாரம்?

திரைப்பட பின்னணிக்குரல் கலைஞர்களின் சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் பிடித்தம் செய்ய, தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சித் தொடர் பின்னணிக்குரல் கலைஞர்கள் சங்கத்துக்கு சென்னை ஐகோர்ட்டு இடைக்கால தடை விதித்துள்ளது.

சென்னை ஐகோர்ட்டில், சினிமா பின்னணிக் குரல் கலைஞர்கள் ஜெ.மதியழகன், ஆர்.மகாலட்சுமி, பி.ஆர்.கண்ணன் ஆகியோர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

நாங்கள், தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சித் தொடர் கலைஞர்கள் மற்றும் பின்னணிக் குரல், கலைஞர்கள் சங்கத்தில் உறுப்பினராக உள்ளோம். இந்தச் சங்கத்தை அதன் நிர்வாகிகள், சங்கத் துணை விதிகளின் அடிப்படையில் நிர்வகித்து வருகின்றனர்.

சினிமா மற்றும் தொலைக்காட்சித் தொடர்களின் பின்னணிக்குரல் கொடுக்கும் எங்களைப் போன்ற கலைஞர்களின் சம்பளம், எங்களது சங்கத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாக தயாரிப்பாளர்கள் செலுத்தி விடுகின்றனர். இந்த சம்பளத்தில் 10 சதவீதத்தை பிடித்தம் செய்துக் கொண்டு, 90 சதவீதத் (சம்பளத்) தொகையை மட்டும் பின்னணிக் குரல் கலைஞர்களுக்கு சங்கம் வழங்குகிறது.

இவ்வாறு ஒட்டுமொத்த பின்னணிக்குரல் கலைஞர்களின் சம்பளத் தொகை, கடந்த 2011ஆம் ஆண்டு ரூ.1.51 கோடியும், 2012ஆம் ஆண்டு ரூ.1.93 கோடியும், 2010ஆம் ஆண்டு ரூ.2.31 கோடியும் சங்கத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், பின்னணிக்குரல் கலைஞர்கள் தங்களது சம்பளம் குறித்து, நேரடியாக தயாரிப்பாளர்களிடம் பேசுவதற்கு அனுமதிப்பதில்லை. மேலும், சம்பளத்தில் 10 சதவீதம் பிடித்தம் செய்வதற்கான ரசீதும் உறுப்பினர்களுக்கு வழங்குவதில்லை. ஆனால், இந்த நடைமுறை நீண்ட காலமாக நடந்து வருகிறது. இதை எதிர்த்து உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினால், அவர்களை சங்க நிர்வாகிகள் மிரட்டுகின்றனர்.

மேலும், உறுப்பினர்களின் சம்பளத்தில் 10 சதவீதம் பிடித்தம் செய்யலாம் என்று சங்கவிதிகள் எதுவும் கூறவில்லை. ஆனால், சட்டவிரோமாக எங்களைப் போன்றவர்களின் சம்பளத்தில் 10 சதவீதத் தொகையை சங்க நிர்வாகிகள் பிடித்தம் செய்கின்றனர். இது குறித்து, தொழிலாளர் நலத் துறை துணை கமிஷனரிடம் கடந்த ஆண்டு அக்டோபர் 20ஆம் தேதி புகார் செய்தோம். ஆனால், இதுவரை அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, நாங்கள் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்க தொழிலாளர் நலத்துறை துணை கமிஷனருக்கு உத்தரவிட வேண்டும். சங்க உறுப்பினர்களின் (பின்னணிக் குரல் கலைஞர்களின்) சம்பளத்தில் 10 சதவீதத்தை பிடித்தம் செய்ய, தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சித்தொடர் கலைஞர்கள் மற்றும் பின்னணிக்குரல் கலைஞர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் எம்.ஏ.பிரகாசுக்கு தடை விதிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதி எம்.துரைசாமி முன்வு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி, சங்க உறுப்பினர்களின் சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் பிடித்தம் செய்ய தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சித் தொடர் கலைஞர்கள் மற்றும் பின்னணிக் குரல் கலைஞர்கள் சங்கத்துக்கு இடைக்கால தடை விதித்தார். இந்த மனுவுக்கு பதிலளிக்கும்படி தொழிலாளர் நலத்துறை துணை கமிஷனர் உள்ளிட்டோருக்கு நோட்டீசு அனுப்ப உத்தரவிட்டார்.

**இமயவரம்பரன்** ◆

# சென்னை உயர்நீதிமன்றம் வளர்ந்த கதை

சென்னை உயர் நீதிமன்றம் கட்டப்பட்டுள்ள இடத்தில் ஆதிகாலத்தில் புகழ்பெற்ற சென்னை கேசவப் பெருமாள் கோவில் இருந்தது. 1648ல் கட்டப்பட்ட அதை எடுத்து வேறு இடத்தில் அமைத்துவிட்டு கோர்ட்டை கட்டினார்கள்.

மெட்ராஸ் ஐகோர்ட்டின் 100வது ஆண்டு விழா 1962ம் ஆண்டும், 125ஆண்டு விழா 1987ம் ஆண்டும் 150வது ஆண்டு விழா 2012ஆம் ஆண்டிலும் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஐகோர்ட்டை கட்டிய கட்டிடத்தில் 1894ம் ஆண்டு கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. அதில் ஏறி, நகரின் முழு அழகையும் ரசித்து பார்க்க முதலில் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

மெட்ராஸ் ஐகோர்ட் வளாகம், உலகின் 2வது பெரிய நீதிமன்ற வளமாகும். மெட்ராஸ் ஐகோர்ட்டில் முதன் முதலாக நீதிபதி பதவி ஏற்றவர் முத்துசாமி அய்யர் ஆவார்.

மெட்ராஸ் என்ற பெயர் 1996ல் சென்னை என்று மாறியது. ஆனால் பழமை சிறப்பு கருதி மெட்ராஸ் ஐகோர்ட் பெயர் அப்படியே நீடிக்க அனுமதிக்கப் பட்டது. சென்னை உயர்நீதி மன்ற கட்டிடம் திறக்கப்பட்ட போது 17 தடவை குண்டுகள் முழங் கப்பட்டன. சென்னை ஐகோர்ட் கட்டி டத்தை திறந்து வைத்த பெய்லி பரோன் கூறுகையில், "நான் பார்த்ததிலேயே அழகான கட்டிடம்" என்றார்.

1862ல் சென்னை உயர்நீதிமன்ற பணிகளை ஸ்காட்லாந்து தலைமை நீதிபதி கோலி ஹார்மன் தொடங்கி வைத்தார்.

1862ல் சென்னை உயர்நீதி மன்றம் தொடங்கப் பட்ட போது தலைமை நீதிபதியும், 5 நீதிபதிகளும் இருந்தனர். இன்று நீதிபதிகளின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது. இதில் 43 பேர் நிரந்தர நீதிபதிகள், 17பேர் கூடுதல் நீதிபதிகள்.

1892ல் ஐகோர்ட்டு செயல்பட தொடங்கிய போது, அதையொட்டி அழகான கடற்கரை இருந்தது. அதை ஐகோர்ட்டு பீச் என்றே அழைத் தனர். சென்னை துறைமுக விரிவாக்கம் காரணமாக அந்த பீச் தூரமாகப் போய்விட்டது.

வழக்குகளை விரைந்து முடித்து பைசல் செய்வதில் இந்தியாவில் சென்னை உயர்நீதிமன்றம் தான் முதல் இடத்தில் உள்ளது.

வக்கீல்கள் போராட்டம் காரணமாக 2003ஆம் ஆண்டு தொடர்ந்து 40 நாட்கள் வரை மெட்ராஸ் ஐகோர்ட்டு முடங்கியது.

சென்னை, மும்பை, கொல்கத்தா நகரங்களில் உயர்நீதி மன்றம் அமைக்க விக்டோரியா மகாராணி ஒரே சமயத்தில் அனுமதி கொடுத்த போதிலும் 27 1892 அன்று கொல்கத்தா உயர்நீதி மன்றம், 1408 1862 அன்று மும்பை உயர்நீதி மன்றம், 15081862 அன்று மெட்ராஸ் உயர்நீதி மன்றம் செயல்படத் துவங்கின.

ஐகோர்ட்டு வளாகத்தின் பல பகுதிகளில் ஆங்காங்கே சிலைகள், உள்பகுதியில் புகைப் படங்கள் ஏராளமாக உள்ளன. இந்தியாவில் வேறு எந்த நீதிமன்றத்திலும் இத்தகைய காட்சிகளைக் காணமுடியாது.

ஐகோர்ட்டு எதிரே ஆண்டர்சன் சர்ச் உள்ளது. ஆங்கிலேயர்கள் பிரார்த் தனை செய்வதற்கு வசதியாக இந்த சர்ச் கட்டப்பட்டது. இதை ஐகோர்ட்டு சர்ச் என்றும் சொல்கிறார்கள்.

**உமாமகேசுவரி**



# மேகேத்தாட்டுவில் அணை கட்டக் கூடாது

## ஜி.கே.வாசன் பேட்டி

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.கே.வாசன் கிருஷ்ணகிரியில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

இலங்கை கடல் பகுதியில் ஆண்டுக்கு 83 நாட்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று தமிழக மீனவர்கள் கோரிக்கை வைத்தனர். ஆனால், இலங்கை அதிபர் சிறிசேனா தமிழக மீனவர்களின் நியாயமான கோரிக்கையை நிராகரித்தார். இந்த விஷயத்தில் அவரும், அவருக்கு கீழ் உள்ள அதிகாரிகளும் தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் அறிக்கை வெளியிடுவது தமிழக மீனவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. எனவே, இந்திய வெளியுறவுத்துறை மந்திரி, பிரதமர், தமிழக முதல்அமைச்சர் ஆகியோர் இந்த விஷயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசியல் கட்சித் தலைவர்கள் தேர்தல் ஆதாயத்திற்காக காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டும் விவகாரத்தை பெரிதாக்கி வருகிறார்கள் என்று கர்நாடகாவைச் சேர்ந்த மத்திய மந்திரி சதானந்த கவுடா கூறியிருப்பது கண்டனத்திற்கு உரியதாகும். இது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானதாகும். எனவே, மத்திய மந்திரி சதானந்தகவுடாவை பிரதமர் நரேந்திர மோடி அழைத்து கண்டிக்க வேண்டும்.

தற்போது உயர்த்தப்பட்டுள்ள சுங்கச்சாவடி கட்டணத்தை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும். கிருஷ்ணாகிரி நகரின் அருகில் அமைந்துள்ள சுங்கச் சாவடியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். மேலும், ரெயில்வே பிளாட்பார கட்டண உயர்வு மற்றும் ரெயில் கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும்.

விவசாயிகளின் எண்ணங்களை 100 சதவீதம் பிரதிபலிக்கக் கூடிய வகையில் நிலம் கையகப் படுத்தும் சட்டத்தில் மத்திய அரசு மாற்றங்களை கொண்டு வர வேண்டும். கிருஷ்ணகிரி மாவட் டத்தில் பிளஸ்2 வினாத்தாள் வாட்ஸ் அப்பில் வெளியான விஷயத்தில் தீவிர விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் மாநில காங்கிரஸ் நிர்வாகிகள் பட்டியல் எப்போது வெளியிடப்படும் என்ற விவரத்தை இந்த மாத இறுதியில் நடைபெறக் கூடிய பொதுக்குழுக் கூட்டத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பேன். மேலும் சென்னையில் நடைபெறக் கூடிய பொதுக் குழு கூட்டத்திற்கு 10 நாட்களுக்குள் நிர்வாகிகள் நியமிக்கப்படுவார்கள்.

என்று ஜி.கே.வாசன் கூறினார்.

**இராயபுரம் பி.எம். பாலா**



# புறப்பொருள் வெண்பாமாலை

இந்நூல் தமிழ்மொழிக்கே சிறந்துரிமை உடைய அகம், புறம் என்னும் பொருள்நெறி மரபு இரண்டனுள், புறப்பொருள் பற்றி எழுந்ததொரு சிறந்த நூலாகும். எழுத்தும் சொல்லும் நன்கு கற்றோர், இவை கருவியாகப் பின்னர் உணரற் பாலது பொருளே ஆதலின், அப்பொருளையும் இலக்கண வகையான வரையறுத்து உணர்த்துதல் இன்றியமையாதது எனக் கொண்ட நம் பண்டைத் தமிழ்ச்சான்றோர் இவ்வுலகியற் பொருள்களைச் சமயக்கணக்கர் மதிவழிச் செல்லாது தனித்து நின்று வியத்தகு முறையில் நுண்ணிதின் ஆராய்ந்து அவற்றிற்கு இலக்கணம் வகுத்துள்ள இச்செயல், நம் தமிழ் மொழியின் பெருமையை நன்கு விளக்கும் சான்றாகும். உலகின்கண் வழங்கும் பிற உயர்தனிச் செம்மொழிகளுள், எம்மொழியினும் இப்பொருள் இலக்கண முறை காணப்படவில்லை.



இனி, நம் சான்றோர் உயிர்ப்பொருள், உயிரில் பொருள், காட்சிப்பொருள், கருத்துப்பொருள் முதலிய பல்வேறு பொருள்களையும் முதல் கருஉரி என முத்திறப்பொருளாகக் கூறுபடுத்து ஓதுவர். அவற்றுள் முதற்பொருளினும் கருப்பொருள் சிறப்புடையன என்றும், கருப்பொருளினும் உரிப்பொருள் சிறப்புடையன என்றும் கருதுவர். இதனை,

“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை.“
*(தொல்.அகத்:3)*

என வரும் தொல்காப்பிய நூற்பாவான் இனிதின் உணரலாம். அவற்றுள் முதற்பொருள் நிலமும் பொழுதும் என்னும் இரண்டுமாம். நிலம் எனவே நிலத்திற்குக் காரணமாகிய நீரும், நீருக்குக் காரணமாகிய தீயும், தீக்குக் காரணமாகிய காற்றும், காற்றுக்குக் காரணமாகிய விசும்பும் கொள்ளப் படும். பொழுதாவது : மாத்திரை முதலாக நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயனம், யாண்டு, ஊழி எனப் பல வகைப்படும். எனவே, பொழுதும் ஐம்பெரும் பூதங்களும் ஆகிய உயிரில் பொருள்கள் முதற்பொருள் எனப்பட்டன என்பது உணராம். இனி இப்பொருள் ஏனைப் பொருள்கள் தோன்றுதற்கும் நிலைத்து நிற்றற்கும் அழிதற்கும் இடனாய் நிற்றலின் இவையிற்றை முதற்பொருள் என வழங்கியது சாலப்பொருந்துவ தேயாகும்.

இனிக் கருப்பொருள்களாவன: முற்கூறப்பட்ட இடத்தினும் காலத்தினும் தோன்றும் பொருள்கள். அவை உயர்திணை, அஃறிணை உயிர்களும் அவையின்றின் உணவு செயல் முதலாயினவும், பறை யாழ் முதலிய செயற்கைப் பொருட்களுள், இன்னோரன்ன பிற பொருள்களுமாம். இவை காலத்தின் அகட்டில் கருவாய்க்கிடந்து இடத்தில் தோறுதலால் கருப்பொருள் எனப்பட்டன.

இனி, உரிப்பொருள்களாவன: மக்கட்குச் சிறந்துரிமை உடைய அகப்புற ஒழுக்கங்களாம். அவை இயற்கை உந்திய வழியே இயங்கும் அஃறிணை உயிரிகளின் ஒழுக்கம் போலாது, அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப்பொருள்களின் இயல் புணர்ந்து தீது ஓரீஇ, நன்றின்பால் நின்றொழுகும் மக்கட்கே சிறந்துரிமை உடைய ஒழுக்கங்கள் என்பார். உரிப்பொருள் எனக் குறியீடு செய்தனர்.

முதுற்பொருளும், கருப்பொருளும் இவ்வுரிப் பொருள் நிகழ்தற் இடனாகலின், அகம் புறம் இரண்டற்கும் பொதுமை உடையன என்க. அவற்றுள் அகஒழுக்கமாவன, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், வாடல், என ஐவகைப்படும். 'ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் தம்முட் கூடுகின்ற காத்துப் பிறந்து, அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவராலும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறு வதொரு பொருளாதலின், அதனை அகம் என்றால். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கும் அகம் என்றது ஓர் ஆகுபெயராகும் என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

இனி உயிர்வாழ்க்கையின் குறிக்கோள் அன்பு என்னும் பண்பினை வளர்த்துக்கோடலேயாகவின், அது வளர்தற்கு ஏதுவாகிய காதல் ஒழுக்கம், அகம் எனப்பட்டதெனினும் ஒக்கும்.

இனி புறமாவது: அறமும் பொருளும் பற்றி நிகழும் வெட்சி கரந்தை முதலிய ஒழுக்கங்களாம். ஒத்த அன்புடையர் தாமேயன்றி, எல்லார்க்குந்த துய்த்துணரப்படுதலானும் இவை இவ்வாறிருந்த தெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும், இவை புறமெனவேபடும். இன்பமேயன்றி துன்பமும் அகத்தே நிகழுமாவெனின்? அதுவுங் காமங் கண்ணிற்றேல் இன்பத்துள் அடங்கும். ஒழிந்துன்பம் புறத்தார்க்குப் புலனாகாமை மறைக்கப்படாமையின் புறத்திணைப்பாலதாம் என்பர் நச்சினார்க்கினியர். இனி, இப்புறவொழுக்கங்களை உரிப்பொருள் எனக் கூறுதல் இல்லை எனினும் பாடலுட் பயின்றவை நாடுங்காலை மூன்றே முறை சிறந்தன என்று ஓதுதலானும், இவ்வெட்சி முதலிய ஒழுக்கங்களைக் குறிஞ்சி முதலியவற்றோடு மாட்டெறிதலானும் இவையும் உரிப்பொருள் என்பதே தொல்காப்பியரின் கருத்தாக உணரலாம்.

அன்பொழுக்கத்திற்கு அங்கமாகும் புறத்தே நிகழும் ஒழுக்கங்கள் புறத்திணை எனப்பட்டன. எனினும் அமையும்.

இனி, இந்நூலின்கண் புற ஒழுக்கங்களைச் சேரத்திரட்டி நிரல்படுத்து அவற்றிற்கு இலக்கணம் வகுத்து அவ்விலக்கணங்கட்கு உதாரணமாக வெண்பாயாப்பாற் செய்யுள் செய்து, அமைக்கப் பட்டிருத்தலின், இது புறப்பொருள் வெண்பா மாலை எனவும், வெண்பாமாலை எனவும் வழங்கப் படுகின்றது.

**புலவர் கு. ஏழுமலை**

◆

---

# காதல்!

ஓட்டப் பந்தயமும்
காதலும் ஒன்று
ஏனென்றால்
யார் எப்போது
விழுவார்கள்
என்பது தெரியாது.
தவறி விழுந்தவர்கள்
அதிலிருந்த எழுவதற்கு
காலமாகும்.
காதலை நினைத்துக்
கவலைப்படாமல்
வாழ்க்கைப் பந்தயத்தில்
காலடி எடுத்து
வைத்தால்
வெற்றி
உங்களுக்குத்தான்.



**க. சீனிவாசன்.**
ஆழ்வார்த்திருநகர்.



தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்




5

# தமிழீழப் படுகொலையும் ஜனதா விமுக்தி பெரமுன படுகொலையும்

இலங்கையில் தமிழர்கள்தான் சிங்களப் படை வெறியர்களால் கொல்லப்பட்டார்களா? றோகன விஜயவீரா தலைமையில் சிங்கள இளைஞர்கள் ஜனதா விமுக்தி பெரமுன அமைப்பை உருவாக்கி அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது இரு பெரிய சிங்களக் கட்சிகளின் அரசுகளாலும் முப்பதாயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப்படவில்லையா? உங்கள் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு என்னும் கருத்து உடைந்து விழுகிறதே" என்று சிங்கள இனவெறியர்களின் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கையை மூடி மறைக்கும் நோக்கோடு சிலர் அடிக்கடி முழக்கம் இடுகிறார்கள்.

பொதுவுடைமை இயக்கம் என்றும் தாங்கள் சேகுவேராவின் வாரிசுகள் என்றும் பீத்திக்கொள்ளும் ஜனதா விமுக்தி பெரமுன ஒரு பொதுவுடைமை அமைப்பல்ல என்பதை முதலில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழர்களைக் கடலில் தள்ள வேண்டும் என்று பொதுக்கூட்டங்களில் தோள்தட்டி மார்தட்டி முழங்குகிறவர்கள்தான் ஜனதா விமுக்தி பெரமுன இனவெறியர்கள் என்பதைத் தமிழர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

'புரட்சி இயக்கம்' என்று அவர்களால் சொல்லப்படுகிற ஜனதா விமுக்தி பெரமுன அமைப்பின் தலைவர் றோகன விஜயவீராவும் அவர் தோழர்களும் என்னோடு ஒன்றாக வெலிக்கடைச் சிறையில் இருந்தவர்கள். தமிழர்களுக்கு எதிரான முழு இன வெறியர்கள் அவர்கள் என்பதை அப்போதுதான் நான் புரிந்துகொண்டேன்.

‘ஜனதா விமுக்தி பெரமுன படை அமைப்பைச் சேர்ந்த முப்பதாயிரம் சிங்கள இளைஞர்கள் இருபெரும் சிங்களக் கட்சிகளின் அரசுகளால் கொல்லப்பட்டது உண்மையே.

ஆனால்

இது நாற்காலி பிடிப்பதற்காக மூன்று சிங்கள இனவெறிக் கட்சிகளிடையே நடந்த பதவிச் சண்டையே தவிர தமிழீழத்தில் நிகழும் இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு இணையான ஒன்றல்ல.

ஆயுதம் ஏந்திய ஜனதா விமுக்தி பெரமுன அமைப்பின் படை உறுப்பினர்கள் கொல்லப் பட்டார்கள். ஆனால் அவர்களின் சிங்கள சிறீ லங்கா மண்ணில் சிங்கள வான்படை விண்ணூர் திகள் குண்டுகளைப் பொழிந்தனவா? கொத்துக் குண்டுகள் நச்சுக்குண்டுகள் சிங்களப் பொதுமக்கள் மீது கொட்டப்பட்டனவா? சிங்கள மண்ணில் வீடுகள் பள்ளிக்கூடங்கள் மருத்துவமனைகள் கோயில்கள் மீது சிங்கள வான்படை விண்ணூர் திகள் குண்டுகளை வீசினவா?

இதுவரை தமிழீழத்தில் பத்தாயிரம் தமிழ்ப் பெண்கள் சிங்களப் படை வெறியர்களின் பாலியல் வன்முறைக்கு இரையாகிப் போனார்களே ஒரு சிங்களப் பெண்ணுக்காவது இந்தக் கொடுமை இழைக்கப்பட்டதா?

தமிழீழத்தில் சிங்கள இனவெறிப் போரில் 90,000 தமிழ்ப் பெண்கள் கணவனை இழந்து கைம் பெண்கள் ஆனார்களே இது சிங்கள சிறீலங்காவில் நிகழ்ந்ததா? 15 இலட்சம் தமிழர்கள் இலங்கைக்கு வெளியே ஏதிலிகளாய் ஓடும் நிலை ஏற்பட்டதே சிங்களவர் மண்ணில் இருந்து ஒரு சிங்களவனாவது இலங்கைக்கு வெளியே ஏதிலியாய் ஓடினானா?

தமிழீழத் தேசிய இன அழிப்பையும் ஜனதா விமுக்தி பெரமுன படை உறுப்பினர்கள் அழிப்பை யும் சமநிலையில் வைத்துப் பார்க்கிறவர்களை பேசுகிறவர்களை எழுதுகிறவர்களைத் தள்ளி ஒதுக் குங்கள்.

**இந்தியாவும் இலங்கையும்**

இந்திய அரசியல் அமைப்பு வேறு இலங்கை அரசியல் அமைப்பு வேறு.

இந்தி தேசிய இனம் மக்கள் எண்ணிக்கையில் பெரிய தேசிய இனமாக இருந்தாலும் இந்தியாவில் மக்கள் 42% இந்தி இனமாகவும் 58% பிற தேசிய இனங்களாகவும் இருக்கிறார்கள். இது இந்தி தேசிய இனம் அல்லாத பிற தேசிய இனங்களுக்குப் பாதுகாப்பாக உள்ளது.

இந்தியாவில் மொழிவழி மாநிலங்களின் நலன்களை அழித்தொழிக்கும் எந்தச் சட்டத் திருத்தத்தையோ ஆணையையோ நடுவண் அரசு எளிதில் கொண்டு வருதல் இயலாது.

28 மாநிலங்கள் கொண்ட இந்தியாவில் ஒரு மொழிவழி மாநிலத்தின் உரிமை பறிக்கப்பட்டால் தங்கள் மாநிலத்துக்கும் அதே நிலைமை வரும் என உணரும் ஏனைய 27 மாநிலங்களும் அந்த மாநிலத் தோடு போராட்டத்தில் ஒன்றிணைந்து நிற்கும்.

இந்நிலை இலங்கையில் இல்லை. சிங்களத் தேசிய இனம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட தேசிய இனமாக இருப்பதால் எந்த நேரத்திலும் அவர்கள் தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிரான ஒரு சட்டத்திருத்தத்தையோ அரசு ஆணையையோ கொண்டு வரலாம்.

தமிழ்த் தேசிய இனத்தோடு இணைந்து போராட இலங்கையில் வேறு எந்தத் தேசிய இனமும் இல்லை. தன்னந் தனித் தேசிய இனமாக சிங்கள இனவெறி ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்க வேண்டியவர் களாகத் தமிழீழ மக்கள் இருக்கிறார்கள்.

இந்திய அரசியல் அமைப்பு மொழி வழித்தேசிய இனங்களுக்காக உருவான கூட்டாட்சி முறை கொண்டது. இலங்கை அரசியல் அமைப்போ சிங்கள தேசிய இனத்தை மட்டும் தாங்கி நிற்கும் ஒற்றையாட்சி முறை கொண்டதாகும்.

இந்தியாவில் அரசுகள் கொண்டு வாழ்ந்த பண் டைத் தேசிய இனங்களின் தாயக உரிமை ஒப்புக் கொள்ளப்பட்டு அத் தாயகம் மொழிவழி மாநிலம் எனும் பெயரில் இந்திய அரசியல் அமைப்பில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் தமிழரின் பண்டைத் தாயகத்தை ஒப்புக்கொள்ள இலங்கை அரசியல் அமைப்பு மறுக் கிறது.

**தொடரும்...**

◆

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் உள்நாட்டு வெளிநாட்டு பெரு நிறுவனங்களின் முகவராக, அச்சு, தொலைக்காட்சி, இணையம் வழி செயல் திறம் மிக்கவராக திரு. நரேந்திர மோடி முன்னிறுத்தப்பட்டார். கருத்தியல் வழி நடக்கும் தனித்த குணம் கொண்ட கட்சி எனப் பெருமை பேசும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.அமைப்புகள், தனி மனித துதிபாடி திரு.மோடியை மக்களிடம் திணித்தனர். மதம், பார்ப்பனீய நலன் சார்ந்த முகத்தை மறைத்து, வளர்ச்சி என்ற போர்வையில் அரசியல் செய்தனர். வட இந்தியாவில் கணிசமான வெற்றியையும் ஈட்டி, ஆட்சியைக் கைப்பற்றினர். தனிப்பெரும்பான்மை உடைய பா.ஜ.க.வின் நிதி அமைச்சர் திரு. அருண்ஜெட்லி, திரு.மோடியின் வழிகாட்டுதல் எவ்வித அரசியல் இடையூறுமின்றி, மிகச் சுதந்திரமான சூழல் இந்திய அரசின் நிதிநிலை அறிக்கை 2015ஐ தொலைநோக்கு பார்வை கொண்ட கொள்கை ஆவணம் என்று அறிவித்து வெளியிட்டிருப்பது சிறப்பான நடைமுறையே. இதில் கூறப்பட்டுள்ள பொருளாதாரத் திட்டங்கள் வழிமுறைகள், திரு.மோடி உரத்துப் பேசி வந்த வளர்ச்சி என்ற சொல்லுக்கு வழி சேர்ப்பதாக இல்லை.

**வருவாய் செலவுகள் பற்றி ஆய்வோம்:**

1. நேரடி வரிகள்: தனிமனித/பொது நிறுவனங்களின் வருவாயின் மீதான வரியாக பெறப்படும் தொகை, கடந்த நிதி ஆண்டை விட ரூ.8,315 கோடி குறைவு. அதாவது பணக்காரர்களிடமிருந்து வசூலிக்கும் வரி குறைக்கப்பட்டுள்ளது.

2. மறைமுக வரிகள்: இது பல்வேறு நுகர்வு பொருள்களின் விற்பனை விலை வழி வரியாக வசூலிக்கப்படுகிறது. இது கடந்த நிதி ஆண்டைவிட ரூ.23,383 கோடி அதிகமாக வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது இந்நாட்டின் ஏழை, எளிய, நடுத்தர மக்களிடமிருந்து அவர்கள் நுகர்வுக்காக வாங்கும் பொருள்களின் விலை வழி கிடைக்கும் இவ்வருவாய் அதிகரிக்கப்பட்டு உள்ளது. அவர்களின் மீதான சுமை அதிகரித்து. வாங்கும் சக்தி குறையும் நிலை உருவாகும். எனவே இது எளிய மக்களுக்கு சுமை சேர்க்கும் பட்ஜெட் என்பது தெளிவு.

ஆக மொத்தத்தில் கடந்த நிதி ஆண்டைவிட ரூ. 96,319 கோடி ரூபாய் அதிகமாக வரி வசூல் செய்ய திட்டமிட்டிருப்பினும், திட்டமிட்ட செலவுகள் என்பது கடந்த நிதி ஆண்டைவிட ரூ.2657 கோடி குறைக்கப்பட்டிருக்கிறது. இது வேலை வாய்ப்பு குறையவும், எளிய மக்கள் நலிவுறவும் வழி கோலும்.

உள்ளாட்சித்துறை, குடிநீர், நலவாழ்வு, குழந்தை மகளிர் நலம், கல்வி, பொது நல வாழ்வுத் துறை என்ற எளிய மக்கள் சார்ந்து இருக்கக்கூடிய, அரசு சார்ந்த நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை பெரிய அளவில் குறைத்து உள்ளதைப்



பார்க்கும்போது, இந்த அரசு மக்கள் நல அரசு அல்ல என்பதையே காட்டுகிறது.

மேலும் நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ள துறைகள் வருமாறு:

1. தாழ்த்தப்பட்டோர் 29%

2. பழங்குடியினர் 25%

3. குறு, சிறு நடுத்தரத்தொழில்கள் 26%

4. காடுகள் சுற்றுச்சூழல் 41%

5. சமூக நல உதவிகள் 15%

இது வெளிப்படையாகவே இவ்வரசின் எளியவர்களுக்கு எதிரான மனப்போக்கை வெளிப்படுத்துகிறது.

பாராட்டுக்குரிய சிறிய அளவிலான ஒதுக்கீடுகள் அணுகுமுறைகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால் இதனைச் செயல்படுத்து வ தற்கான நிதி ஒதுக்கீடு பற்றி எந்த தரவுகளும் வெளியிடப்படவில்லை என்ற நிலை, நம்பிக் கையைத் தரவில்லை. அவையாவன.

1. குறுநீர்ப் பாசனம், 2. கிராமப்புற கடன், வேளாண்மைக் கடன், விபத்துக் காப்பீடு, உயிர்க்காப்பீடு, அனைவருக்கும் வீடு (2022), 6 கோடி கழிப்பறைகள் கட்டுதல், நடுநிலைப்பள்ளிகளின் மேம்பாடு.

மாநலிங்களுடனான இணக்க அணுகுமுறை என்ற திரு.மோடியின் புதுச் சொல்லாடலுக்குப் பொருள் உண்டாக்கும் முறையில் ஏதாவது செய்தி உள்ளதா என ஆய்வோம்.

நடுவண் அரசின் வருவாயில் மாநிலங்களுக்கான நிதி கடந்த ஆண்டில் 32% ஆக இருந்தது. இதனை 42% ஆக உயர்த்துவாக கூறியிருப்பது பாராட்டுக்குரியது. ஆனால் தெளிவான விவரங்கள் இல்லை.

தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீடு 1966ஆம் ஆண்டில் 7.96% இருந்து, 200இல் 5.39% ஆகி, 2015 இல் 4.02% என்ற அளவுக்குத் தாழ்ந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு கடந்த நிதியாண்டைவிட ரூ.2,700 கோடி குறைவாகவே கிடைக்கும் என்ற நிலை. இந்நிலை தவிர்க்கப்பட மோடி அரசின் அணுகு முறை ஏதுமில்லை.

வளர்ச்சி என்ற மோடியின் மந்திரச்சொல்?! குறித்து ஆய்வோம் : மின்னாற்றல் உற்பத்தி இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் பற்றாக்குறையாகவே உள்ளது. தற்போதைய சூழல் நிலக்கரி வழி வெப்பத்தின் மின்நிலையங்களே முன்னிலை வகிக்கின்றன. இதற்கான நிலக்கரி வளம் நம்மிடமிருந்தும், அதனை வெட்டியெடுக்க ஏற்பாடு இல்லாததால் 200 மில்லியன் டன் பற்றாக்குறை ஏற்பட்டு, 30 ஆயிரம் மெகாவாட் நிறுவுத்திறன் வீணடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நம்நாட்டு நிலக்கரி, குறைவான வெப்பத்திற்கான கொண்டதாக இருப்பதால், அதிகத் திறன்கொண்ட வெளிநாட்டு நிலக்கரியை இறக்குமதி செய்து, 7:3 என்ற அளவில் கலந்து பெயன்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்நிலையில் 5,000 மெகாவாட் வெப்ப மின் உற்பத்தி நிலையங்கள், நான்கு தொடங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியாகி யுள்ளது. ஆனால் தெளிவான விவரங்களும், நிதி ஒதுக்கீடும் இல்லை, மாறாக உலக அளவில் மோச மான காற்று மாசு உள்ளதாகக் கருதப்படும். 20 நகரங்களில், 13 நகரங்கள் இந்தியாவில் இருக் கின்றன என்பது நம்மை திகைக்க வைக்கிறது. இந் நிலை, இம்மின் நிலையங்கள் சரியான முறையில் இயங்க வில்லை என்பதையே சுட்டுகிறது. இது ஒட்டு மொத்த மக்களின் நல வாழ்வை கேள்விக் குறியாக்கும். நிறைவேற்றப்படும் என்பது இந்தியாவின் நலனுக்கு உகந்ததா? என்று நாம் சிந்திக்கவேண்டும்.

**தொடரும்..**

**பொன், ஏழுமலை**

மின்பொறிஞர் சமூக ஆர்வலர்

கைபேசி 94 45 87 22 85,

**நம்பிக்கை தான் வாழ்க்கை**

**கழுதை:** என் முதலாளி என்னை ரொம்ப அடிக்கிறான்

**நாய்:** அப்ப எங்கேயாவது ஓடிபோக வேண்டியதுதானே?

**கழுதை:** அப்படிதான் நினைத்தேன். ஆனா, முதலாளி அவன் பொண்ணு எப்ப படிப்புல மார்க் குறைவா வாங்கினாலும். இந்த கழுதைக்குதான் உன்னைக் கட்டிவைப்பேன் என்று சொல்கிறான். அதான் கொஞ்சம் வெயிட் பண்றேன்.

சிறுகதை


செ.பி.இராசாராம்



# கொட்டத்து உரையாடல்

வெயில் பல் இளித்தது. களத்து வீட்டின் ஓடுகளில் கதிர்கள் பட்டுத் தெரிப்பதைப் பார்த்த போது சுள்ளென்று இருந்தது. சூரியனின் ஆங்காரம் மேனியில் குத்தினாலும் கால் வைத்த இடமெல்லாம் குளிர்ப்பு. மழை பெய்து ஓய்ந்த தடம் தை மாதத்து பனி போதாதன்று மழை வேறு. இருந்தாலும் ஊருக்குள் கிராமத்து சனங்கள் மழையை வரவேற்றனர். இந்தக் காலத்திலும் மழையை வழிபட கிராமத்து சனங்களை விட்டால், வேறு யார் இருக்கா...?

வட கிழக்காக பார்த்திருந்த அந்தக் களத்து வீட்டின் இடப்புறத்தில் கொட்டம். பத்திலிருந்து பதினைந்து அடி வரைக்குமான நீளமும் எட்டு அடி அகலமும் இருக்கும் கீற்று வேயப்பட்ட அந்தக் கொட்டத்திற்கு மூன்றரை அடி உயரத்தில் மண் சுவர். வாசல் பகுதியைத் தவிர மூன்று பக்கங்களும் மண் சுவர், அடுத்த பெரு மழைக்கு சாய்ந்து விடும். மேற்புற கீற்று வரும் ஆடி மாத காற்றுக்கு கண்டிப்பாக பறந்துவிடும்.



கொட்டத்தினுள் கரையான் மண்டிய ஏர் கலப்பை, தூசி அப்பிய அம்மி, ஆட்டுக்கல், கவிழ்த்து வைக்கப்பட்ட கமலை, சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த தொறட்டிக் கம்பு எனப் பயன்படுத்தப்படாத பொருட்கள் கிடந்தன. திருகை மட்டும் பச்சரிசி திருக்கியதற்கான அடையாளங் களுடன் இருந்தது. அனைத்தையும் கவனித்து களத்து மேட்டை நோக்கும் போது ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு சிறு விவசாய குடும்பம் வாழ்ந்திருக்க வேண்டும். அதை மெய்பித்தது அந்தக் கொட்டத்து உரையாடல்“.

தென்னந்தோப்புக்குள் மூன்று நான்கு தேங்காய்கள் விழும்படியான சற்று பலமான காற்று வீசியது. சுவரில் சாய்ந்திருந்த தொறட்டி காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கமலையின் மீது சரிந்தது.

நானே முடியாம கெடக்குறேன்..! என்னய ஏண்டா நோண்டுற...? கமலை நொந்து கொண்டது.

உன்னய ஓரசனும்னு ஆச வந்துச்சு... ...அதேன்... கிண்டல் செய்தது தொறட்டி.

ஆட்டுக்கல் ச்சும்மா இருடா என்று கூறிவிட்டு, கமலையிடம் ஏங்கௌவி நம்மூரு வாத்தியாருங்க கண்காட்சினு உன்னய மெட்ராசுக்கு தூக்கிப் போனாங்களே...அங்க என்ன நடந்துச்சு? நீயா

சொல்லுவேனு பாத்தா வாய தொறக்க மாட்ற...“

கமலையிடம் மெட்ராசப் பத்தி சொன்னா நாங்களும் தெரிஞ்சுப்போம்ல...என்றது அம்மி...

சிறிய சலிப்புடன் கமலை அடி ஏண்டி நீங்க வேற. கண்காட்சியாடி அது...? தொடக்கத்திலேயே வெறுப்புத் தெரிந்தது. வேற வேற ஊர்கள்ல இருந்து உங்க இனமெல்லாம் கூட வந்துச்சுக. எல்லாரும் ஏதோ அதிசயத்த பாக்குற மாரி பாத்தாங்நே சின்னச் சின்ன பொடு செல்லாம் கையில ஒரு போனு வச்சிருக்குதுக...என்றது.

இடையில் குறுக்கிட்ட ஏர் கலப்பை நம்மூரு இளசுக கூட பெரிய பெரிய போனுல்லாம் வச்சிருக்காங்க்நே“.

கமலை, அதுக என்னமோ வச்சிருக்கட்டும். ஆனா....செலுப்பி எடுக்குறேன், செலுப்பி எடுக்குறேனு ஏ உசிர ல வாங்கிருச்சுக...ஒன்னு இந்த பக்கம் கை போட்டு நின்னா, இன்னொன்னு இந்த பக்கம் சாஞ்சுக்குது. ரெண்டு சிறுசுக ஏ வயித்துக்குள்ள வந்து உக்காந்துக்குதுங்க...“

சிறிய இடைவெளிவிட்ட கமலை தொடர்ந்தது.

அங்க எல்லாரும் சீனு பேண்டுதாண்டி போடுறாங்நே. அங்க இருக்குற வெயிலுக்கு எப்படி தேன் அத போட்டு திரியுதுகளோ? ஆனா அம்மூரு பொம்பளைகளுக்கு ரொம்ப நல்லதுடி வயல்ல வேல செய்யறதுக்கு ஏத்தது. நம்ம பெரிய அய்யா போடுவாகல்ல கலரு டவுசரு. அதே மாரி வெறிக்கிற கலருலதேன் இளவட்ட பயலுக கால்சட்ட போடுறாங்கநே. சாகப்போற பெருசுக கூட சொகுசா ஏசி கார்ல திரியுதுங்க...“

ஏர் கலப்பை அதெல்லாஞ்சரி செலுப்பின்னா என்ன...?

அம்மி ஏதோ சொல்ல வாயெடுக்கும் போதே தூரத்தில் பாண்டியம்மா வருவதைக் கவனித்து சொன்னது ஆட்டுக்கல். கொட்டத்தில் அமைதி சூழ்ந்தது. கையில் சிறு கூடையுடன் வந்த பாண்டியம்மாள் திருகையைக் கழுவி பச்சரிசி இடித்துவிட்டுச் சென்றாள்.

என்னடி....? பாண்டியம்மா புதுசா நம்ம பக்கம் வந்துட்டு போறா...? சந்தேமாக கேட்டது அம்மி.

திருகை, அவ நெகமுந்தானே வாராஞ் களத்துக்கு எசமானி அவதேன். அவ வராம வேற யாரு வராது..நீ கேக்குறதேன் புதுசா இருக்கு.’

அம்மி, இவ ஒருத்தி...ஆறேழு வருசமா மண்ணுக்குள்ளயே கெடந்து மண்ணா போய்ட்டா. வீட்டலதேன் மிக்சி, கெரைண்டர் அது இதுனு வச்சிருக்காளே, அத விட்டுட்டு ஓங்கிட்ட வந்து அரிசி திருக்கிட்டு போறாளே...அத கேக்குறேன்...’

ரெண்டு நாள்ல பொங்கல் வருதுல... அதேன்..சிறிய இடைவெளிக்குப்பின் ஆடி மாசம் சாமி அழைக்க ஒரு வாட்டி, அப்புறம் பொங்கலு, அதவிட்டா மாசித் திருவிழா. ஆக மொத்தம் வருசத்துல முனு வாட்டி நம்மக்கிட்ட வருவா...’

அது ஏண்டி....? புரியாமல் கேட்டது அம்மி.

ம்க்கும்....இத்தன வருசமா இந்த குடும்பத் தோட பொளப்பு நடத்தியும். இது தெரியலயா? இதுல என்னய மண்ணுங்கிற...’

ஆமா இவளுக்கு எல்லாம் தெரியும் ஏண்டினு ஒரு வார்த்த கேட்டதுக்கு எட்டு படிக்கிறா...

அம்ம சாமிக்கு ஆகாதுல..சிறிய கோவத்துடன் சொன்னது திருகை.

அம்மி வாயினுள் ஏதோ முனுமுனுத்தது. இவர்களின் உரையாடலில் கலந்து கொள்ளாமல் ஆரம்பத்தில் இருந்தே உம்மென்று இருந்தது ஆட்டுக்கல். இடையிடையே ஏர் கலப்பையின் மீது உக்கிரமான கோவப் பார்வையை வீசியது. சிறிது நேர அமைதிக்குப் பின்னர் அம்மியிடம் ரகசியமாக பேச முனைந்தது ஆட்டுக்கல்.

ஆட்டுக்கல், அக்கா செத்த இப்டி வாயேன்...“

அம்மி, என்னனு சொல்றீ. எனக்கு என்ன நடந்து வர காலு இருக்கா...! பறந்து வர றெக்க இருக்கா! ஓம்பக்கத்துல வந்து ஓரசிட்டு உக்கார...

ஆட்டுக்கல், பாண்டியம்மா அரிசி திரிக்கையில் இந்த கலப்ப நாயி குறுகுறுனே பாக்குறியான்.

விட்டா அவ மேலேயே விழுந்துருவியான்..

அம்மி, ஒனக்கு ஏ இந்த வேல? நானும் கவனிச்சிட்டுதேன் இருந்தேன். அங்கிருந்தே அவளமேயுற..! நீயே கரையான் மேஞ்சது போக மிச்ச மீதியா தொங்கிட்டு இருக்க.. கலப்பையைப் பார்த்து கேட்டது.

கலப்பை, ஆமா அவ மட்டும் என்ன தங்கமா? மிந்தி மாரியா இருக்கா? கலருதேன் கொஞ்சம் கூடிருக்கு. இந்த வீட்டுக்கு வாக்கப்பட்டு வந்தப்போ ஒருத்தர் விடாம அவள மெச்சுனாங்க. ஏன்னா...அவ வேல அப்பிடி....இப்ப அது மாரியா இருக்குறா? ஊருக்குள்ள இருந்து களத்துக்கு வரும்போதே மூச்சரச்சு போயி வாரா...?

இடையில் குறுக்கிட்டது ஆட்டுக்கல் 'இங்க வந்த ஆறு வருசத்துல நாலு பிள்ள பெத்துட்டாள்ல...அப்புறம் ஒடம்பு என்னதுக்கு ஆகும்...? கலப்பை மீதான கோவம் இன்னும் சிறிது தெரிந்தது.

கலப்பை, அம்ம பஞ்சு அப்பத்தாவுந்தே பதினொரு பிள்ள பெத்துச்சுஞ் இப்பவும் பாரு குத்து கல்லு மாரி இருக்கு..."

திருகை, எங்க எல்லாரையும் மூலையில போட்டுட்டு கரண்ட்ல வேல செய்யுறால்ல...அதேன் மந்தையம்மா அவள தண்டிச்சிட்டா..மறைமுகமாக பெருமை பேசியது திருகை. அதை ஆதரித்து அம்மியும், ஆட்டுக்கல்லும் ம்..போட்டன.

தொறட்டி, ரொம்ப பீத்திகாதீங்கடி இந்த வீட்டு ஆம்பளைக்கு வாக்கப்பட்டு சீரளிய னும்னு அவளுக்கு விதி...

ஆட்டுக்கல், இந்த வீட்டு ஆம்பளைக்கு என்ன கொற...? ஏ மாமே அவள நல்லாத்தேன் பாத்துக்குறாரு...

கலப்பை, ஆமா பொல்லாத மாமே...வெறுமை படர சொன்னது.

ஆட்டுக்கல், கரையானுக்கு உன்ன கொடுத்துப்புட்டு, டிராக்டர் வாங்கிட்டாருனு ஒனக்கு பொறாமை? வயிறு எரியுற...

என்னய இப்புடி தொங்க விட்டதுக்குதேன் அவரு நல்லா அனுபவிக்கிறாரே..குரல் உடைந்து சொல்லிவிட்டு டிராக்டர் லோனு இன்னும் அடைக்க முடியல...என முனு முனுத்தது.

ஆட்டுக்கல், அவருக்கென்ன சிங்கத்துக்கு...

கலப்பை, நீந்தேன் மெச்சிக்கனும். பத்து வருசத்துக்கு மின்ன எப்படி இருந்தாரு தெரியுமா? இப்பவுந்தே இருக்காரே உங்க மாமேஞ் என கோவமாக பேச, அதட்டலான குரலுடன் குறுக்கிட்டது கமலை.

டேய்...நீ என்னடான்னா அவனுக்கு சாபமிடுற. அவளுக என்னடான்னா எங்களோட பாவம் பாண்டியம்மாவ விடாதுனு பீத்திகி றாளுக... அவுகல்லாம் அம்மள சாமியா நெனக்கிறாங்க. நாமளே அவங்கள திட்டி பேசலாமாய்யா...என்ற வேண்டுதலுடன் முடித்தது கமலை.

கலப்பை, இப்ப சாமியா நெனக்கிறாங்யே. இன்னும் கொஞ்சம் நாள்ல சாமியாவே போயிருவோம்.

கமலை, ஒலகம் போற வேகத்துக்கு ஈடு கொடுத்தாதானே அம்ம மக்களும் நாலு காசு பாக்க முடியும்...அத விட்டுட்டு பழசையே கட்டி அலுக முடியுமா? அம்ம குடும்பமும் ஏசி கார்ல போகனும்ல...

சிறிது நேரம் அமைதி நிலவியது. தென்னந் தோப்புக்குள் இருந்து வந்தான் ஆறுமுகம். பாண்டியம்மாளின் கணவன். வெற்றுடம்பில் தூசிகள் நிறைந்து காணப்பட்டது. தென்னம் மட்டை சேகரித்திருப்பான். நெஞ்சு முடிகள் தூசிகளுடன் இருந்தது. இடுப்பில் ஒரு கோவணம் மட்டும். தூரத்தில் ஆறுமுகம் வரும்போதே கொட்டத்து உறவுகள் கவனித்துவிட்டார்கள்.

ஏர் கலப்பை, சின்ன வயசுல இவனுக்கு கோவணமே கட்ட தெரியாது. இப்ப பரவாயில்ல நல்லா கட்டிக்கிறான். என்றுகூறி விட்டு 'ஏசி காராம்..'என முனுமுனுத்தது, மெல்லியதாக சிரித்தது.

நன்றி: **தமிழர் கண்ணோட்டம்.**

# சங்கம் 4 இலக்கியத் திருவிழாவில் "ஓங்கு பெருஞ் செந்நெல், ஊடு கயலுகள்"



திருமதி ம. ரேவதி சூழலியல் அறிஞர்

இது ஆன்மீக உரையல்ல அதற்கும் உயர்வான உரை. இப்போது இந்தியாவில் இருக்கிற பறவைகளில் நாற்பது இனங்கள் அழிந்து விடும் அபாயத்தில் இருக்கின்றன. பி பி எம் பாய்சன் என்ற மருந்துதான் இதற்குக் காரணம். பயிர்களுக்கு இந்த மருந்து அடிக்கப்படுகிறது. அது பறவைகளைப் பாதிக்கிறது. ஒரு நகை வாங்கப் போனால் பேரம் பேசுவோம். ஆனால் சாப்பிடுகிற சாப்பாட்டில் விசம் இருக்கிறது என்றால் கண்டுகொள்வாரில்லை. இங்கே நடப்பது அநியாயம், சூழ்ச்சி, நயவஞ்சகம், சதித்திட்டம். நமது விதைகள் நம் கைவிட்டுப் போய்விட்டன.

அதனால் பன்னாட்டு நிறுவனங்கள் விதைச் சந்தையைக் கைப்பற்றி விட்டன. ஏழாயிரத்தி லிருந்து பத்தாயிரம் ஆண்டுகள் பாரம்பரியம் உள்ளது நமது விவசாயம். குறிஞ்சி நில மக்கள் தினையை விதைக்க கற்றுக் கொண்டார்கள். நெல்விதைக்கு அப்புறம் தான் பேரரசுகள் உருவாகின. முல்லை நிலத்திலே வரகு, சாமையும் மருத நிலத்தில் நெல்லும் விதைக்கப் பட்டன. குறிஞ்சியும் முல்லையும் வன் புலம். மருதம் வண்டல் மண்.

மருதத்தில் பல வகையான நெல்விதைகள் விதைக்கப்பட்டன. மடுவு முழுங்கி என்றொரு நெல்வகை, ஓங்கி உயரும். தமிழர்களின் பத்தாயிரம் ஆண்டுகால அறிவு நமது நெல்விதைகள். மாப்பிள்ளைச் சம்பா, காடைக்கழுத்தான், குழியடிச்சான், உவர் முண்டான் இப்படி இருபதாயிரம் நெல் வகைகள் இருந்தன. இப்போது 355 வகைகளைத்தான் மீட்டிருக்கிறோம். குறுவை அறுபது நாட்களில் விளைச்சலைத் தரும். நமது நெல்களின் பெயரைக் கேட்டால் அதன் வரலாறு தெரிந்துவிடும். நாம் சொந்த நிலத்தில் அடிமைகளாக ஆகிவிட்டோம். விதைகள் பெண்களில் கைகளில் இருந்தன. வட இந்திய அரண்மனைகளைப்போல் நமது மன்னர்களாக பாண்டிய சோழ சேர மன்னர்களின் அரண்மனை இருக்கவில்லை. காரணம் விவசாயத்தில் நமது மன்னர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

குளங்களை வெட்டியிருக்கிறார்கள். திருமலைராயன் என்ற மன்னன் 365 குளங்களை வெட்டியிருந்தானாம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குளத்தில் குளிப்பானாம். அரசன் குளிக்கும் குளங்கள் என்பதால் எல்லாக்குளங்களையும் சுத்தமாக பராமரித்திருக்கிறார்கள்.

பெட்ரோல் தயாரிப்பில் நாப்தா அம்மோனியம் நைட்ரேட் என்ற வெடி உப்பு பெறப்படுகிறது. இந்த வெடி உப்பு போர் வெடிஉப்பு என்று சொல்லப் படுகிறது. இந்த வெடிஉப்பு குண்டுகள் செய்யப் பயன்பட்டிருக்கிறது. போர் இல்லாததால் அந்த

வெடியுப்பை விவசாயத்தில் தளைச்சத்தாக மாற்றினார்கள் யூரியா என்ற பெயரில் நிலங்களைக் கெடுக்கிறது. முன்னேறிய நாடுகளுக்கு புதிய சந்தை ஆசியநாடுகள். அதிலும் இந்தியாதான் முக்கியச் சந்தை. இந்தியாவில் உணவுப்பஞ்சம் ஏற்பட்ட போது அமெரிக்காவிடம் கோதுமையைப் பெற பி எல் 420 என்ற ஒப்பந்தம் போடப்பட்டது.

நமது விவசாயத்தில் ஒன்றை கடைபிடித்தார்கள். பயிர்களின் அடிப்பகுதி நிலத்திற்கு உரமாக விட்டுவிடுவார்கள். நடுப்பகுதியை வைக்கோலாக மாடுகளுக்கு கொடுத்தவிடுவார்கள். நுனிப்பகுதி வீட்டுக்கு. பழங்கால தமிழர்கள் வேளாண்மையில் பயிர்களை எப்படி நட வேண்டும் என்பதை பழமொழி மூலம் சொல்லித் தந்திருக்கிறார்கள். நெல்லுக்கு நண்டோட, வாழைக்கு வண்டியோட, தென்னைக்குத் தேரோட என்பதுதான் அந்தப் பழமொழி. நெல் நடும்போது இரண்டு நெற் பயிர்களுக்கும் இடையில் நண்டு ஓடும் அளவிற்கு இடைவெளி விட்டு நட வேண்டும். வாழை நடும்போது இரண்டு வாழைக்கும் இடையில் வண்டி ஓடுகிற அளவு இடைவெளி விட வேண்டும். தென்னை கன்றுகள் நடும்போது இரண்டு தென்னைக் கன்றுகளுக்கும் இடையில் தேர் ஓட வேண்டுமாம்.

ஜி. டி. நாயுடு ஒரு பேருந்தைக் கண்டுபிடித்து அதை ஓட்டினாராம். அதில் ஏறுவதற்கு எல்லோரும் அஞ்சியிருக்கின்றனர். பேருந்தில் ஏறிச் செல்வதற்கு கட்டணமில்லை என்று கூறியும் யாரும் ஏறவில்லை. பேருந்தை ஓட்டிச் செல்லும்போது யாராவது சாலை ஓரத்தில் நின்றிருந்தால் அவர்களை இழுத்து பேருந்துக்குள் ஏற்றிச் சென்றார்களாம். அதன் பின்னர்தான் அந்தப் பேருந்தில் மக்கள் ஏறுவதற்கு துணிந்தார்களாம். இதைப்போல பயிர்களுக்கான உரத்தை அரசு இலவசமாகத் தந்தது. அதை விவசாயிகள் வாங்கிக் கொள்ளவில்லை. அதிகாரிகளுக்கு உரத்தை கொடுக்கும் பணி கொடுக் கப் பட்டது. மக்கள் வாங்காததால் அதை யாருக்கும் தெரியாமல் சாலையோரங்களில் இருக்கும் வயல்களில் கொட்டிவிட்டுப் போய்விடு வார்களாம். அந்தப் பயிர்கள் மட்டும் நன்றாக வளர்ந்திருக் குமாம். இப்படித்தான் விவசாயிகளை தங்களது வலைக்குள் இழுத்திருக்கிறார்கள். சீமை உரம் போட்ட பயிர்கள் எல்லாம் தண்ணி போட்ட மாதிரி சாய்ந்து விட்டனவாம். புகார் வந்தது. விசாரணை நடந்தது. ராக்பெல்லர் பவுண்டேசன், ஃபோர்டு பவுண்டேசன் ஆராய்ந்தன. குட்டையான பயிருக்கான விதையை தயார் செய்தனர். எவ்வளவு அடித்தாலும் ஸ்டெடியாக இருக்கணும் என்பதற்காக ஐ ஆர் எட்டு, ஐ ஆர் இருபது கொண்டு வரப்பட்டது. விவசாயி கடனாளியானான். மூன்று இலட்சத்து எண்பதாயிரம் விவசாயிகள் இறந்திருக்கிறார்கள். இறந்திருக்கிறார்கள் என்பதைவிட படுகொலை செய்யப்பட்டி ருக்கிறார்கள் என்பதே உண்மை.

விதை என்பது வினைச்சொல்லாகவும் இருக்கிறது, பெயர்ச்சொல்லாகவும் இருக்கிறது. அடுத்த தலைமுறையினருக்கு விதை வேண்டும் என்பதற்காக நமது முன்னோர்கள், விதைகளை கோபுரங்களில் மேலே உள்ள கலசங்களில் வைத்தனர். நெல் விதை பன்னிரண்டு ஆண்டுகள் அதின் தன்மையை இழக்காமல் இருக்கும். நெல் முளைக்குமா முளைக்காதா என்பதைத் தெரிந்து கொள்ள கிராமங்களில் முளைப்பாரி என்ற ஒரு விழாவை வைத்து சோதித்தறிந்தனர்.

இப்போது இரண்டாம் பசுமைப்புரட்சி கொண்டு வரவேண்டும் என்று துடிக்கிறார்கள். அதில் முழுவதுமாக மரபு மாற்றப்பட்ட விதைகளைத்தான் கொண்டு வருவார்கள். இப்போது படிக்கிறவர்கள் நமது முன்னோர்களின் அறிவைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு பாடத்தில் எம் பி ஏ படிக்கின்றனர். ஆனால் நமது விவசாயிகள் வாட்டர் மேனேஜ்மெண்ட், லேண்ட் மேனேஜ்மெண்ட், சீட் (விதை) மேனேஜ் மெண்ட் என்று 42 எம் பி ஏ படித்தவர் களாக இருக்கிறார்கள்.

அவர்களை கைநாட்டு என்று சொல்கிறார்கள். அவர்களா கைநாட்டுகள்? அப்படிப்பட்ட விவசாயிகளில் ஒரு மணி நேரத்துக்கு ஐந்து விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்ற புள்ளிவிபரம் நமக்குக் கிடைக்கிறது. காரணம் நமது விதைகள் அழிக்கப்பட்டு, பாரம்பரிய விவசாயம் நசுக்கப்படுவதுதான்.



தமிழ்நாட்டின், தமிழக மக்களின் வாழ்க்கைக் கதவுகளைத் திறந்த காமராஜரின் எளியவாழ்க்கையும், அரசியல் சாதுார்யமும் இவரை மக்களின் மனதில் நீங்கா இடம்பிடிக்க வைத்தது. எத்தனையோ படித்த மேதைகள் அரசியலில் தங்களுக்கான ஒரு தடத்தை பதித்திட நினைத்த அக்காலத்திலும் படிக்காத மாமேதையான காமராஜர் தனக்கானதொரு தன்னிகரற்ற இடத்தைப் பற்றியதன் காரணம், அவர்மக்கள் மேல்வைத்த அதீத அன்புதான். அந்த அன்பின் வெளிப்பாடுதான் அவரின் கொள்கைகளும், அவர் அமைத்த பல்வேறுதிட்டங்களும், மக்கள் நலப்பணிகளுமாகும்.

இதோ அவர் வாழ்வில் நடந்த சில ருசிகர சம்பவங்கள்,

காமராஜர் ஒரு நாள் வீட்டில் அமர்ந்து மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவரைப் பார்க்க ஒரு சிறுமியும் சிறுவனும் உள்ளே வந்தனர். பரட்டைத் தலையும் அழுக்குத் துணியும் அவர்களின் ஏழ்மையை பறைசாற்றின. பணியாளர் ஒருவர் அவர்களை விரட்ட முற்பட, கேட் வரை ஓடிய குழந்தைகள் தயங்கி நின்றார்கள். தம்மைப் பார்க்க வரும் பிரமுகர்களை வாசல் வரை வந்து வழியனுப்பிய காமராஜர், அந்தக் குழந்தைகளை கவனித்து விடுகிறார். அடுத்த நிமிடம் உற்சாகம் பொங்க "என்ன யாரை பார்க்க வந்தீங்க?" என்று கேட்டபடி அவரே குழந்தைகளிடம் வந்து விட....

அப்பொழுது அந்தச் சிறுமி தயங்கிப் பேசினாள் "உங்களைத் தான் பார்க்க வந்தோம். எங்களுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும் தான். அண்ணனுக்கு டைப்ரைட்டிங் பரீட்சை பீஸ் கட்ட பணம் இல்லை. உங்களைப் பார்த்தா உதவி செய்வீங்கன்னு எல்லோரும் சொன்னாங்க அது தான் வந்தோம்" என்றாள்....அவர்களை அன்போடு தட்டிக் கொடுத்தபடி, அம்மா தான் அனுப்பிச்சாங்களா? என்று

# சிவகாமியின் மைந்தன்

காமராஜர் கேட்க...அந்தக் குழந்தைகளோ "இல்லை அய்யா, நாங்களாகத் தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாக விக்கிறாங்க. அதுல தான் எங்களை படிக்க வைக்கிறாங்க "என்று சொல்ல, அதற்கு மேல் கேட்க முடியாமல். மாடிக்குச் சென்ற அவர், ஒரு கவருடன் வந்தார் சிறுமியிடம் கொடுத்து "இதில் கொஞ்சம் பணம் இருக்கு. அண்ணனுக்கு பீஸ் கட்டிடுங்க அம்மா பேச்சைக் கேட்டு நல்ல பிள்ளைங்களா நடந்துக்கணும்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

மறுநாள் மீண்டும் அந்தக் குழந்தைகள் வந்தனர். உதவியாளர் வைரவன் குழந்தைகளை உள்ளே அழைத்து வந்தார்..."வாங்க வாங்க" என்று அவர்களை வாஞ்சையுடன் அழைத்த காமராஜரிடம் அந்தக் குழந்தைகள். பரீட்சைக்கு பணம் கட்டி விட்டோம் அய்யா. அந்த ரசீதை அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க என்று காமராஜரிடம் அந்தச் சிறுமி ரசீதை நீட்டினாள். காமராஜர் கண் கலங்கி விட்டார். ஏழ்மையிலும் இவ்வளவு நேர்மையா? குழந்தைகள் அவரை...வணங்கினார்கள் அவரும் குழந்தைகளை வணங்கினார்....வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார்.

முன்னாள் முதல்வர் குமாரசாமிராசாவின் திருவுருவப்படத்தை திறப்பதற்காக பாரதப் பிரதமர் நேரு ராஜபாளையத்திற்கு வந்திருந்தார். முதல்வர் காமராஜரும் உடன் வந்திருந்தார். நேருவுக்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பு தரபட்டது. யார் யார் நேருவுக்கு மாலை அணிவிப்பது என பட்டியலிட்டு மாவட்ட ஆட்சித்தலைவரால் அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது. விடுதலைப் போராட்ட வீரர் ஏ.கே.பெருமாள்ராஜா என்ற "பேச்சி ராஜா" அவர்கள் தெரு வழியாகவும் பிரதமர் நேரு போவதாக பயணத்தில் இருந்தது. எனவே, தன் தெருவிற்கு வருகின்ற நேருவுக்கு மாலை அறிவித்து வரவேற்பு கொடுக்க தியாகி ஏ.கே .பெருமாள் ராஜா விரும்பினார்.

ஆனால் அதற்கான முன் அனுமதியை அவர் பெற்றிருக்க வில்லை. எனவே, தியாகியாக இருந்தாலும், பிரதமர் நேருவுக்கு மாலை அணிவிக்க முடியுமா? என்ற சந்தேகம் இருந்து கொண்டிருந்தது.

அவருடன் இருந்தவர்களும், அனுமதி இல்லை. எனவே மாலை அணிவித்து மாட்டிக்கொள்ள வேண்டாம்" என அவரை எச்சரிக்கை செய்து கொண்டிருந்தனர். விடுதலைக்காக பாடுபட்ட அந்த தியாகி கட்டாயம் மாலை அணிவித்தே ஆகவேண்டுமென உறுதி கொண்டிருந்தார். எந்த எச்சரிக்கைகளையும் அவர் பொருட்படுத்தவில்லை.

பாரதப் பிரதமர் நேரு, முதல்வர் காமராசர் இருவரும் ஊர்வலமாக வந்து கொண்டிருந்தனர். தொலைவிலிருந்தே தியாகி பெருமாள்ராஜா, தனது வீட்டில் மாலையுடன் காத்திருப்பதை காமராஜ் பார்த்துவிட்டார். உடனடியாக தாங்கள் வந்த வாகனத்தை தியாகி பெருமாள் ராஜா வீட்டருகே கொண்டு செல்ல கட்டளையிட்டார். பெருமாள் ராஜாவைக் கூப்பிட்டு பிரதமர் நேருவுக்கு அறிமுகம் செய்துவைத்தார். பெருமாள்ராஜாவும் மிகுந்த மகிழ்ச்சியோடு நேருவிற்க்கு மாலை அணிவித்தார். இதன் வழியாக நாட்டிற்கு பாடுபட்ட ஒரு தியாகிக்கு நேர்ந்திருக்க கூடிய கசப்பான உணர்வு களை தவிர்த்து விட்டார்.

இதற்கு அடிப்படை காரணம், மாட மாளிகை யில் இருந்து ஆட்சி செய்யாமல் மக்களோடு மக்களாக இருந்த காரணத்தால் அவர்களுடைய உணர்வுகளை புரிந்து கொண்டு செயல்படக்கூடிய தன்மையை காமராஜ் அவர்கள் பெற்றிருந்தார்.

ஒரு கோயில் திறந்தால் இந்துக்களுக்கு மகிழ்ச்சி

ஒரு சர்ச் திறந்தால் கிறிஸ்துவர்களுக்கு மகிழ்ச்சி

ஒரு மசூதி திறந்தால் இஸ்லாமியர்களுக்கு மகிழ்ச்சி

ஒரு நூலகம் திறந்தால் புத்திசாலிகள் அனைவருக்கும் மகிழ்ச்சி

ஒரு பள்ளிக்கூடம் திறந்தால் நம்மை படைத்த கடவுளுக்கே மகிழ்ச்சி.

பச்சைத்தமிழர் காமராசரின் உச்சமனதிலிருந்து உலகிற்கு விழுந்த விதைகள்.

**அமல்ராஜ்..**

# தமிழ்ச்சிற்பியின் விழா!

மார்ச்சுத்திங்கள் இருபத்துமூன்றாம் தேதி மாலை ஆறுமணிக்கு மயிலாப்பூர் கற்பகம் விடுதியில் தமிழ்சிற்பி அவர்களின் “கோடி முத்தம்“ என்ற நூல் வெளியீட்டு விழாவும் “கயிலையே போற்றும் கபாலீச்சரமே“ என்ற பாடல் குறுந்தகடு வெளியீட்டு விழாவும் நடந்தது. இந்த ஒலிப்பேழையில் உள்ள பாடல்களை எழுதி இசைஅமைத்திருந்தார் தமிழ்சிற்பி. விழாவிற்கு வந்திருந்தவர்களை, விழாநாயகன் தமிழ்சிற்பியின் மூத்தமகன் மருத்துவர் நவீன்வைரமூர்த்தி வரவேற்றார். ஆரூர் சுந்தரராமன் அவர்கள் தொகுத்து வழங்கினார். வாழ்த்துரை வழங்க வருபவர்கள் தாங்களாகவே வந்து வாழ்த்தும்படி தமிழ்சிற்பி கேட்டுக்கொண்டதாக தொகுப்பாளர் கூற, பன்முக இசையமைப்பாளர்கள் பாடலாசிரியர்கள் சங்கத் தலைவர் பல்லவி பிரகாஷ் அவர்கள் வாழ்த்துவதற்காக எழுந்து வந்தார்.

தமிழ்சிற்பி அவர்களுடைய இயற்பெயர் தட்சிணாமூர்த்தி என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நான் இசையமைப்பாளர் என்பதால் என்னிடம் பாடல் எழுத வாய்ப்பு வேண்டி வந்தார். நானும் வாய்ப்புக் கொடுத்தேன். பெயரை மாற்றிக்கொள்ளுங்களே என்றேன். அவரோ நீங்களே ஒரு பெயர் வையுங்கள் என்றார். அந்த நேரத்தில் என் வாயிலிருந்து தமிழ்சிற்பி என்று வந்தது. அந்தப்பெயரை அவரும் ஏற்றுக்கொண்டார். அந்த வகையில் அவருக்குப் பெயர் வைத்தவன் என்பதால் மகிழ்ச்சியடைகிறேன். புத்தருக்கு போதிமரத்தடியில் ஞானோதயம் ஏற்பட்டதுபோல் நமது தமிழ்சிற்பிக்கு வள்ளுவர்கோட்டத்தில் தான் ஏற்பட்டது அங்கேதான் உட்கார்ந்து எழுதுவார். எனது நண்பர் அரவிந்ஸ்ரீராம் இசையமைத்து எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்கள் பாடிய சிவாயநமக என்ற பாடல் தொகுப்பு ஏற்படுத்திய சாதனையைப் போல தமிழ்சிற்பியின் இந்த கயிலையே போற்றும் கபாலீச்சரமே என்ற பாடல் தொகுப்பு அதிகமான அளவில் விற்கவேண்டும். நீங்களெல்லாம் அதற்கு ஆதரவு தரவேண்டும். நானும் திரு.காந்தி கண்ணதாசன் அவர்களும் எச்.எம்.வி. நிறுவனத்தில் ஒன்றாக



வேலைசெய்தவர்கள். அவர் தமிழ்சிற்பியை வாழ்த்த வந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்சிற்பிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். என்று வாழ்த்தி அமர்ந்தார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் போ. சத்தியமூர்த்தி அவர்கள் பேசுகையில் தமிழ்சிற்பி நல்ல படைப்பாளி, இந்த கவிதைநூல் சந்தத்தில் அமைந்துள்ளது. ஏழைப்பிள்ளைகளுக்கு கல்வி கற்றுக்கொடுத்த தமிழ்சிற்பி அவர்கள் ஒரு சிறந்த படைப்பைத் தந்திருக்கிறார். அவருக்கு வாழ்த்துகள் என்றார். அவரைத் தொடர்ந்து இயக்குனர் ஜெயபிரகாஷ் அவர்கள் பேசும்போது, எனது மூன்றாவது படம் தலையணை மந்திரம். லாஸ்ஏஞ்செல்சில் திரைத்துறை பற்றிய படிப்பு படித்தேன். சிவனுக்கும் எனக்கும் தொடர்பு உண்டு. அவர் பாடல்கள் மூலமாக உங்கள் முன் சிவனுக்கு நன்றி சொல்ல இங்கே வந்திருக்கிறேன். 5000 பேர்களுக்கு நான் புராஜக்ட் மேனேஜர்களுக்கு பயிற்சி அளித்திருக்கிறேன். ஒரு நாள் பயிற்சி கொடுத்துக்கொண்டிருக்கும்போது என்னால் பேச முடியவில்லை. அதுவும் அந்தக்குழுவிற்கான கடைசிநாள் அது. சான்றிதழ்கள் எல்லாம் கொடுக்க வேண்டும். எப்படியோ சிரமப்பட்டு பேசி முடித்தேன். ஒரு நண்பர் சொன்னார் தர்மாபுரம் சுவாமிநாதன் அவர்கள் பாடிய பாடல்களைக் கேட்கச் சொன்னார். சிவன் பாடல்களை கேட்ட எனக்கு ஆறுமாதத்தில் குணம் கிடைத்தது. அதற்காகவே இந்த விழாவில் நன்றி சொல்ல வந்தேன். வாய்ப்புக்கொடுத்த தமிழ்சிற்பிக்கு நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

நீயா நானா கோபிநாத் அவர்கள் பேசுகையில், தமிழ்சிற்பியை எனக்குத் தெரியாது, அவர் தொலைபேசியில் அவரைப் பற்றிச் சொன்னார். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர். கலைஆர்வம் மிக்கவர் என்பதால் நான் வருகிறேன் என்று ஒத்துக்கொண்டேன். நான் வருவேனா என்று அவருக்குச் சந்தேகம் இருந்திருக்கும். நான் வந்து கீழேயிருந்து போன் பண்ணியபிறகுதான் நம்பிக்கை வந்திருக்கும். நான் பள்ளியில் படிக்கும்போது புத்தகம் போட காசு இல்லை. அப்போது புத்தகம் போட காசு குறைவுதான் என்றாலும் அதுவே அந்த நேரத்தில் இல்லை. நண்பர்கள் டீ வாங்கித்தருகிறேன் என் காதலியிடம் கொடுக்க கவிதை எழுதிக்கொடு என்று கேட்பார்கள், அவர்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். நான் அப்போது எழுதிய கவிதைகளை எல்லாம் பல ஆண்டுகள் கடந்து நூலாக்கியிருக்கிறேன். இவர் கூட பல ஆண்டுகளுக்கு முன் எழுதியவைகளை இப்போது வெளியிடுகிறார். இவரது தன்னம்பிக்கையைப் பாராட்டுகிறேன். இலக்கிய ஆர்வத்தை விட்டுக் கொடுக்காத கவிஞருடைய புத்தகம் இது. விடா முயற்சி கொண்ட படைப்பாளியின் கவிதை இது. சந்தநடையோடு நல்ல புத்தகம் தந்திருக்கிறார். கடுமையான உழைப்பின் பலன் இது, தமிழ்சிற்பிக்கு வாழ்த்துகள் என்றார்.

திரு. காந்தி கண்ணதாசன் அவர்கள் தமிழ்சிற்பியை வாழ்த்திப் பேசினார். தி.நகர் நடேசன் பூங்காவில் நடைபயிற்சி மேற்கொள்கையில் எனக்கு நண்பரானார் தமிழ்சிற்பி. விழாவிற்கு அழைத்தார் ஒத்துக்கொண்டேன். காரணம் பல நாட்கள் காத்திருந்து இப்போது இந்த நூலைக் கொண்டு வந்திருக்கிறார். கோபி அவர்கள் எனக்கு நல்ல நண்பர். சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி மூலம் என்னை உலகமெங்கும் அறியச் செய்தவர். அவரைப்போலவே நமது தமிழ்சிற்பியும் நல்ல உழைப்பாளி. புத்தகவிழா என்றால் மேடையில் ஆறு பேர் இருப்பார்கள், கீழே நாலு பேர் இருப்பார்கள். மேல் இருப்பவர்களில் இருவரை இறக்கி கீழே உட்கார வைப்பார்கள் இப்படித்தான் நடக்கும். ஆனால் இந்த விழாவில் அரங்கம் நிறைந்திருக்கிறது. இது புத்தகத்தின் வெற்றி, ஆசிரியரின் வெற்றி! எங்களது நோக்கமெல்லாம் தரமான நூல்கள், குறைவான விலை என்பதுதான். அதைச் சரியாகச் செய்திருக்கிறார் தமிழ்சிற்பி. எனது நண்பர் புகழேந்தி, கோபியின் புத்தகத்தை வெளியிட்டார். மிகப்பெரிய விற்பனையை அப்புத்தகம் சந்தித்தது. இதற்கு முன் அப்பா எழுதிய அர்த்தமுள்ள இந்துமதம் ஏழு இலட்சம் புத்தகங்கள் விற்கப்பட்டு சாதனை படைத்தது. இன்னும் விற்பனை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அக்கினிச்சிறகுகள், பொன்னியின் செல்வன் போன்ற புத்தகங்கள் விற்பனையில் சாதனைகளைப் படைத்துள்ளன. அதுபோல் தமிழ்சிற்பியின் புத்தகமும் சாதனை படைக்க வாழ்த்துகிறேன் என்றார்.


சிவத்திரு. மு. பெ. சத்தியவேல் முருகனார் அவர்கள் வாழ்த்திப் பேசியபோது, எனது மாணவர்தான் தமிழ்சிற்பி. எதைச் செய்தாலும் காலமும் இடமும் கருதிச் செய்தல் வேண்டும் என்பதற்கு இணங்க இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதி வைத்திருந்தவைகள் நூல் வடிவில் இன்று வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்சிற்பி அவர்களின்

படைப்பு வெற்றி பெற வாழ்த்துகிறேன். என்று பேசியதோடு தமிழின் சிறப்பை ஆதாரங்களுடன் பேசினார். அவருக்குப்பின் வாழ்த்த வந்த நடிகர் சந்தானம் அவர்கள் "எனக்கு திடீர் என்று சொன்னால் பேசவராது. எழுதிக்கொடுத்தால்தான் பேசுவேன். நான் ஒரு சிவபக்தன். நடிகர் என்றால் கார், ஐபோன் என்று வைத்திருந்தால்தான் மரியாதை இல்லாவிட்டால் மரியாதை இருக்காது. ரமணமகரிசி சாப்பிட்ட கொட்டாங்கச்சிக்கு இருக்கின்ற மரியாதையைப் பார்த்தேன். வாழ்க்கையைப் புரிந்துகொண்டேன். நண்பர் ஆர்யா உடல்நிலை சரியில்லா நிலையிலும் இந்த விழாவுக்கு நான் அழைத்ததும் வந்தார், நண்பர் கணேஷ் அவர்களும் எனது அழைப்புக்கு இணங்கி வருகை தந்திருக்கின்றனர். அவர்களுக்கு நன்றி. தமிழ்சிற்பியின் படைப்பு வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

கயிலையே போற்றும் கபாலுச்சரமே என்ற தமிழ்சிற்பியின் இசைப்படைப்பில் உன்னிக் கிருஷ்ணன், புஷ்பவனம் குப்புசாமி, முகேஷ், கோவில்பட்டி அமலி, அனந்து, ரகுபதி, பிரியா பிரகாஷ், மகாநதி ஷோபனா, கிருத்திகா ஆகியோர் பாடியிருந்தனர். அரங்கத்தில் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. ஒலிப்பேழைகள் மூன் ஆடியோ, 159/103, சௌத் வெஸ்ட் போக் ரோட், தி.நகர், சென்னை 17. என்ற முகவரியில் கிடைக்கும் என தமிழ்சிற்பி கூறினார். அலைபேசி 99627 71963, 9840219074.

தமிழ்சிற்பி ஏற்புரை ஆற்றினார். தமிழ்சிற்பியின் இளையமகன் மருத்துவர் த. பிரவீன்குமரகுருமூர்த்தி அவர்கள் நன்றிகூற விழா இனிதே நிறைவுபெற்றது.

---



# மாரடைப்பா?

*துரதிஷ்டவசமாக மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இறப்பவர்கள் அதிகமாக தனியாக இருந்திருப்பவராகவே உள்ளனர்....! உங்கள் இதயம் தாறுமாறாக துடிக்கிறது. நீங்கள் சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள்தான் உள்ளது. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது. தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இரும வேண்டும். ஒவ்வொரு முறை இருமுவதர்க்கு முன்னரும் மூச்சை இழுத்துவிடவேண்டும்.*

*இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும். இருதயம் இயல்பு நிலை திரும்பும் வரையில் அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு இரண்டு நொடிகளுக்கு ஒருமுறை மூச்சை இழுத்துவிட்டு இருமிக்கொண்டே இருக்க வேண்டும். மூச்சை இழுத்து விடுவதினால் நுரைஈரலுக்கு ஆக்சிஜன் சீராகச் செல்ல வழி வகுக்கிறது. இருமுவதால் இருதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக்கொண்டே இருக்க உதவும். இதனால் ரத்த ஓட்டம் சீரடையும். இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராகத் துடிக்கும்". பின்னர் இருதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம்..*

*வீட்டில் தனியாக இருக்கும் போது மாரடைப்பு வந்தால் உங்களை நீங்களே எப்படி காப்பாற்றிக்கொள்வது?*

*வேலைப் பளுவின் காரணமாக மற்றும் இதர சில பிரச்சினைகள் காரணமாக உங்கள் மனம் மிகவும் அழுத்தத்துடன் உள்ளது. நீங்கள் மிகவும் படபடப்பாகவும் தொய்வாகவும் உள்ளீர்கள். திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக "வலி" ஏற்படுவதை உணர்கிறீர்கள். உங்கள் வீட்டில் இருந்து மருத்துவமனை ஒரு ஐந்து மைல் தூரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஆனால் உங்களால் அந்த ஐந்து மையில் தூரத்தைக் கடக்க முடியாது என உங்கள் மூளை உங்களுக்குச் சொல்கிறது.*

*இந்த நேரத்தில் நம் உயிரைக் காத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?*

# பா.ஜ.க.வின் இந்துத்துவா பரப்புரை

பாரதிய சனதா அரசவையில் அமர்ந்ததி லிருந்து சமஸ்கிருதத்தைப் புகுத்துவது, இந்தியைத் திணிப்பது, இந்து மதத்தைத் தவிர மற்ற மதத்தினரைப் புண்படுத்துவது, அவர்களது வழிபாட்டுத்தளங்கைள உடைப்பது, மற்ற சமயத்தினரை அநாகரிகமாகப் பேசுவது என்பது தொடர்கதையாக தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

கிறிஸ்தவர்களின் புனிதவெள்ளி, ஈஸ்டர் தினங்களில் நீதிபதிகள் மாநாடு ஒன்றைக் கூட்டியிருக்கிறார்கள். இந்த மாநாடு தொடர்பாக குரியன் ஜோசப் என்ற நீதிபதி தலைமை நீதிபதி தத்துவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் கிறிஸ்தவர்களின் முக்கிய தினமான புனித வெள்ளி முதல் ஈஸ்டர் பண்டிகை வரையிலான நாட்களில் நீதிபதிகள் மாநாட்டை நடத்துவது வேதனை தருகிறது. தீபாவளி, தசரா, ஹோலி, ரம்ஜான் போன்ற பண்டிகைகளின் போது இதுமாதிரி முக்கிய நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறுவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இவரது கடிதத்துக்கு தலைமை நீதிபதி தத்துவும் பதில் கடிதம் அனுப்பியிருந்தார். அதில் நீதிமன்ற நலன் முக்கியமா? அல்லது தனிநபர் நலன் முக்கியமா? என்று அவர் கேள்வி எழுப்பி இருந்தார். இது தொடர்பாக இரண்டு வேறுபட்ட கருத்துகள் நிலவின. இதற்கிடையில் நீதிபதி குரியன் ஜோசப் தலைமை அமைச்சர் மோடிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில், நீதிபதிகள் மாநாடு புனிதவெள்ளி நாளையொட்டி வருவதால் என்னால் அதில் கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். இந்த நாளில் பெற்றோருடனும் குடும்பத்தின் மூத்த மற்ற உறுப்பினர்களுடனும் இந்த புனிதமான வார இறுதியில் ஒன்றாகக் கொண்டாடுவது எங்களின் பாரம்பரிய வழக்கமாகும். எனவே இந்த நாளில் நான் கேரளாவில் இருப்பேன். தீபாவளி, தசரா, ஹோலி, ரம்ஜான், பக்ரீத் போன்ற புனித தினங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் எந்த முக்கிய அரசு நிகழ்ச்சிகளும் நடைபெறுவதில்லை.

இந்தியாவில் சர்வ தர்ம சத்தியபாவனா என்னும் கொள்கையின் அடிப்படையில் மதச்சார்பின்மை பின்பற்றப்பட்டு வருகிறது. எனவே அவற்றின் மீதான நம்பிக்கைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.



தற்போதைய நிகழ்ச்சிகளை மீண்டும் மாற்றி அமைப்பது என்பது மிகவும் தாமதமான ஒன்றாகி விடும். அதே நேரம் நீங்கள் இந்திய மதச் சார்பின்மையின் பாதுகாவலன் என்கிற முறையில் பொது நிகழ்ச்சிகளை அட்டவணைப் படுத்தும் போது அனைத்து மத மக்களின் புனித தினங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டு கிறேன். குறிப்பாக தேசிய விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்ட புனித தினங்களை கவனத்தில் கொண்டு அவற்றுக்கு சம முக்கியத்துவ மும் மதிப்பும் அளித்திட வேண்டும் என தங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்று எழுதியிருந்தார். நீதிபதிகள் மாநாட்டை ஒட்டி டெல்லியில் பிரதமர் மோடி அளித்த விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நீதிபதி குரியன் ஜோசப்பும் அழைக்கப் பட்டு இருந்தார். ஆனால் கிறிஸ்தவர்களின் புனித நாளில் மாநாடு நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இதில் கலந்து கொள்ளாமல் அவர் புறக்கணித்தார்.

இந்நிகழ்வுகளுக்குப்பிறகு தலைமை நீதிபதி தத்துவிடம் நிருபர்கள் நீதிபதி குரியன் ஜோசப் பற்றிக் கேட்டபோது உண்மையிலேயே இது மாநாடு அல்ல. அது நீதிபதிகள் தங்களுக்குள்ளே நீதித்துறை தொடர்பான பிரச்சினைகளை விவாதிக்க ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்புதான். இந்தப் பிரச்சினை துரதிர்ஷ்டவசமானது என்றும் நான் நீதித்துறையின் குடும்பத் தலைவர். ஒரு உறுப்பினர் என்னிடம் கேள்வி கேட்டால், அதை நாங்கள் எங்களுக்குள் தீர்த்துக்கொள்வோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கிடையில் வாட்ஸ்ஆப்பில் இதைச்சுற்றி பல கருத்தகள் வலம் வருகின்றன. அதில் ஒன்று, நீதிபதி குரியன் அவர்களே, நமது நாட்டைக் காக்கும் இராணுவ வீரர்கள் திருவிழாக்கள் என்று வீட்டிற்கு வந்துவிட்டால் நமது நாட்டின் பாதுகாப்பு என்னாவது என்று கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு துறைக்கும் ஒரு விதி இருக்கிறது என்பதை ஏன் இவர்கள் மறந்து விட்டு இந்துத்வா என்ற முகமூடி அணிந்து கொண்டு குடிமக்களின் உரிமைகளை ஒடுக்க நினைக்கிறார்களோ தெரியவில்லை. இன்னொருவர் கேட்கிறார். உங்களுக்கு அவசியமான ஆபரேசன் என்றால் இந்த நாளில் பண்ண மாட்டீர்களா என்று? இவர்கள் எல்லாம் அறிவோடுதான் பேசுகிறார்களா? நீதிபதி தத்து இதைப்பற்றி பேசுகையில் இதற்கு முன் ஓரிரு ஆண்டுகள் இப்படித்தான் நடந்திருக்கிறது என்கிறார். அந்த நாட்களும் கிறித்துவ புனித நாட்கள், அரசு விடுமுறை நாட்கள்தான். ஏன் அது தீபாவளியாக ஹோலியாக இல்லை. இம்மாதிரியான நிகழ்வுகள் தொடர்ந்து புகுத்தப்படுவது என்பது மதச்சார்பற்ற கொள்கைக்கு சாவு மணியாகத்தான் இருக்கும். இதை நாம் கண்டு கொள்ளாது விட்டுவிடுவோமானால் தமிழர்களின் முதன்மையான விழாவாகிய பொங்கல் அன்றுகூட தமிழகத்தில் நடுவண் அரசு சார்பாக ஏதாவது மாநாடு வைத்து நமது திருவிழாவை முனை மழுங்கப் பண்ணிவிடுவார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

ஓரிரு நாட்களுக்கு முன், ஏர் இந்தியா வானூர்தில் இந்தியில் சிறப்பாக அறிவிப்பு செய்பவர்களுக்கு பரிசு என்று அறிவிக்கப்பட்டிருக் கிறது.

**வேர்மகள்**

---



தாய் அன்பு!

நீ என்னைச் சுமந்தாய்
உன் வயிற்றில்.
உன்னை நான் சுமக்கிறேன்
என் உள்ளத்தில்.
நீ என்னைச் சுமந்த வலி
எனக்குத் தெரியாது ஆனால்
நீ இல்லா நேரமெல்லாம்
எனக்கு வலி.
உந்தன் அன்புக்காக
ஏங்குகிறேன்.

**க. சீனிவாசன்.**
ஆழ்வார்த்திருநகர்.

◆


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**



தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் டென்மார்க்
நடாத்தும்
தேசத்தின் குயில்கள்
சனி
Sep 05 TH 2015
தமிழீழ எழுச்சிப்பாடல் போட்டி
விண்ணப்ப முடிவு திகதி 24-04-15
விண்ணப்பபடிவம் அனுப்பவேண்டிய முகவரி
deesathin kujel
Postbox 43
7400 Herning
தொடர்புகளுக்கு
25732814
மின்னஞ்சல் முகவரி
deesathinkujel@gmail.com

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

